Book 14

# புதிய நினைவூட்டல்

மாத இதழ்

# குர்ஆன் தீவிரவாதத்தை எதிர்க்கின்றது.

## அப்படியானால்

# போதிப்பது எது ?!?!?



ஆக்டோபர்
2000
October

PUTHIYA NINAIVOOTAL
TAMIL MONTHLY

# எளிய உண்மைகள்

**இறுதி இறைவேதமான அல்குர்ஆன் உலகின் வேறு எந்தப் புத்தகத்திலும் காணப்படாத, தனித்தன்மையான, அற்புதமான அமைப்பில் அமைக்கப்பட்டுள்ளது. அதில் உள்ள ஒவ்வொரு விஷயமும் 19 என்ற எண்ணின் அடிப்படையில் அற்புதமாக அமைக்கப்பட்டுள்ளது. இது, இறைவன் குர்ஆனில் 74:23-31வசனங்களில் கூறுவது போல இக்கட்டமைப்பு குர்ஆன் மனிதர்களின் சொல் அல்ல என்று நிரூபிப்பதாகவும், நம்பிக்கையாளர்களின் நம்பிக்கையை அதிகரிப்பதாகவும், நயவஞ்சகர்களை வெளிப்படுத்துவதாகவும் அமைந்துள்ளதை அறிவுடையோர்கள் கண்கூடாகக் கண்டு கொள்ளலாம்.. 74:35ல் இறைவன் கூறுவதைப் போல் இது ஒரு மிகப்பெரியஅற்புதமாகவும் அமைந்திருப்பதை அறிந்து அதிசயிக்கலாம், மேலும் இக்கட்டமைப்பு அல்குர்ஆனின் ஒவ்வொரு எண்ணையும் எழுத்தையும் பாதுகாக்கும் வேலையை தொடர்ந்து செய்யக் கூடியதாகவும் உள்ளதை அறிந்து வியக்கலாம் .**

1. குர் ஆனின் முதல் வசனமான பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம் என்பதில் இடம் பெறும் அரபி எழுத்துக்கள் ........................................................................ 19
2. குர்ஆன் 114 சூராக்களை கொண்டது 114 = ....................................................... 19x6
3. குர் ஆனின் மொத்த வசனங்களின் எண்ணிக்கை 6346 ........................................ 19x334
   (அதில் எண்ணிடப்பட்டது 6234, எண்ணிடப்படாதது 112 (பிஸ் மிக்கள்)
   6234 + 112 = 6346 கவனிக்க 6+3+4+ 6 = ............................................................19
4. 'பிஸ்மில்லாஹ்' குர் ஆனில் 114 முறை உள்ளது 114 ............................................19X6
   ( சூரா 9ல் பிஸ்மி இல்லாவிட்டாலும் 19 சூராக்கள் தள்ளி 27வது சூராவில் இரு முறை உள்ள) சூரா 27 வசனம் 30 ஆக 27+30 = 57.......................... 19x3
5. பிஸ்மில்லாஹ் இல்லாத சூரா 9ற்கும் பிஸ்மில்லாஹ் இருமுறை இடம் பெறும் சூரா 27க்கும் இடையில் இடம் பெறும் சூராக்கள்............................19
6. பிஸ்மி இல்லாத சூரா 9 முதல் பிஸ்மி இருமுறை இடம் பெறும் சூராவான 27 வரை கூட்டினால் (9+10+11.... 27) வரும் கூட்டுத்தொகை 342 = .....19x18
7. இதில் முக்கிய விஷயம் என்ன வென்றால் இருமுறை பிஸ்மி இடம் பெறும் சூராவில் முதல் பிஸ்மிக்கும் இரண்டாம் பிஸ்மிக்கும் இடையில் உள்ள வார்த்தைகள் சரியாக அதே 342 = .........................19x18
8. புகழ்பெற்ற முதல் வஹீ (96:1 முதல் 5) யில் இடம் பெறும் வார்த்தைகள் சரியாக ........................................................................................ 19
9. 19 வார்த்தைகள் கொண்ட அந்த முதல் வஹீயில் இடம் பெறும் எழுத்துக்கள் சரியாக 76 ........................................................................... 19x4
10. இறக்கப்பட்ட வரிசையில் முதல் சூராவான 96ல் இடம் பெறும் வசனங்கள் ...........19
11. இந்த சூரா, இடது புறத்திலிருந்து புரட்டினால் வருவது ..............................19வது இடத்தில்
12. 96ம் சூரா முழுதும் இடம்பெறும் எழுத்துக்கள் 304 ............................................. 19x16
13. இறுதி வஹீயான சூரா 110ல் இடம் பெறும் வார்த்தைகளும் சரியாக .................... 19
14. கடைசி வெளிப்பாட்டின் (சூரா 110:1) முதல் வசனத்தில் இருப்பது ............ 19 எழுத்துக்கள்
15. 29 சூராக்களின் ஆரம்பங்களில் வரும் 14 எழுத்துக்கள் கொண்டு அமைக்கப்பட்ட 14 வகையான முத்திரை எழுத்துக்கள் (உம்) அலிப், லாம், மீம்) இவற்றைக் கூட்ட 29+14+14 = 57 = ........................................................................... 19x3
16. முத்திரை எழுத்துக்கள் அமைந்த 29 சூராக்களின் சூரா எண்களைக் கூட்ட (2+3+7+ ...... + 50+ 68) = 822 அத்துடன் 14 ஐக் கூட்ட (அதாவது 14 வகைகள்) = 822+14 = 836 = ......................................................................................19x44
17. முத்திரை எழுத்து கொண்ட முதல் சூராவான 2க்கும் முத்திரை எழுத்து கொண்ட கடைசி சூராவான 68க்கும் இடையில் முத்திரை எழுத்து இல்லாத சூராக்கள் 38 உள்ளன ............................................ 19x2
18. முதல் முத்திரை சூராவிலிருந்து கடைசி முத்திரை சூரா வரை முத்திரையிட்டதும் முத்திரையிடாதது மாக மாறி மாறி வருவது ............................................ 19 விதமாக
19. குர்ஆனில் 30 எண்கள் குறிப்பிடப்படுகின்றன. அவை 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10, 11, 12, 19, 20, 30, 40, 50, 60, 70, 80, 99, 100, 200, 300, 1000, 2,000, 3,000, 5,000, 50,000 & 1,00,000 இந்த எண்க ளின் கூட்டுத் தொகை 1,62,146 ......................... 19x8534

மிக்க அருளும் மிக்க அன்பும் உடைய இறைவனின் பெயரால்.

இந்த மக்கள் பேசும் பேச்சுக்களை நாம் நன்கறிகின்றோம்.இவர்களை நிர்பந்தப்படுத்தி ஏற்கச் செய்வது உமது பணியல்ல என் எச்சரிக்கைக்கு அஞ்சுகின்ற ஒவ்வொருவருக்கும் நீர் இந்த குர்ஆனைக் கொண்டு அறிவுரை கூறுவீராக! (50:45)

# புதிய நினைவூட்டல்

## ஓர் உலகம், ஓர் இறை, ஒரே செய்தி

செய்தி 1

அக்டோபர் 2000
நினைவு 9

குறிப்பு:- உண்மையான இறையச்ச முடையவர்களே மேம்போக்காக எதையும் படிக்காமல் வசன எண்களை உங்களிடமுள்ள குர்ஆனை ஒப்பிட்டு பார்த்து சிந்தித்து விளங்கிக் கொள்ளுங்கள்.

ஆசிரியர் :
C.S. ரஃபியுத்தீன்

துணை ஆசிரியர் :
N.A. அஹமது ஹுஸைன்

தனிச்சுற்று இதழ்

சந்தா விபரம்

உள் நாடு ஓராண்டு ரூ. 60.00

தனி பிரதி ரூ. 5.00

புதிய நினைவூட்டல் மாத இதழ்

அலுவலகம்

## இதழின் உள்ளே

★ குர்ஆன் மட்டமே இறுதி நாள் வரை வழி காட்டும் தூதர்
★ இஸ்லாமியத் தீவிரவாதம் ஒரு கண்ணோட்டம்
★ இறைவனின் நற்செய்திகள்
★ நானும் உங்களை போன்ற மனிதனே!
★ நாய் : மனிதர்களின் உற்ற தோழன்
★ இறைவனின் முத்திரை 19
★ கேள்வி பதில்
★ தீவிரவாதத்திற்கு குர்ஆன் கன்டனம்

தலையங்கம்

# குர் ஆன் மட்டுமே இறுதி நாள் வரை வழி காட்டும் தூதர்

எல்லாம் வல்ல இறைவனின் பெருங்கிருபையால் உங்கள் தோழமைக்குரிய "புதிய நினைவூட்டல்" (தனிச் சுற்றித ழ்களுடன் சேர்த்து) தனது ஓராண்டுப் பயணத்தை முடித்து இரண்டாமாண்டில் நுழைகிறது. இரண்டாமாண்டின் முதல் இதழ் இதோ உங்கள் கரங்களில் தவழ்கிறது. ஐம்பது வருடங்களாகவும் நூறு வருடங்களாகவும் தொடர்ந்து பத்திரிக்கைகள் வெளி வந்து கொண்டிருக்கும் இக்கால கட்டத்தில் ஒரு வருடம் என்பது பெரிய கால அளவு இல்லைதான். ஆயினும், எத்தனை பெரிய சமூகங்களின் கோபத்திற் குள்ளானாலும் சத்தியத்தைத் துணிவுடன் சொல்லும் பத்திரிக்கைகள் குறைவு, இலாபங் களின் நோக்கின்றி நடத்தப் படும் பத்திரிக்கைகள், உண்மை யைத் தொடர்ந்து தேடும் பத்திரிக்கைகள் மிக மிகக் குறைவு. அவை ஓராண்டு காலம் தொடர்வதே பெரிய விஷயம். இறைவனின் உதவியாலும், கருணையாலும் மாத்திரமே இது சாத்தியம். நம்முடைய இரட்சகரின் ஆசியுடன், உண்மையின் பாதையில் தொடர்ந்து முன்னேறிக் கொண்டிருக்கிறது புதிய நினைவூட்டல். நம் இதழ் குர்ஆனின் அடிப்படைச் செய்தியான இறைவன் மட்டுமே என்ற ஓரிறைக் கொள்கையைக் கலப்படமின்றி தொடர்ந்து எடுத்துச் சொல்லும் நபிமார்களையும், தூதர்களையும், மகான்களையும் இறைவனுக்கு இணையாக்கும் கொடுமையைக் கண்டிக்கும்.

நமது இதழ் குர்ஆன் வலியுறுத்தும் சிறந்த குணநலன்களான மனித நேயம், சகோதரத்துவம், சத்தியம், தர்மம், சமநீதி, நேர்மை, நடுநிலை, பொறுமை, போன்றவற்றை மனிதர்களிடத்தில் பரப்ப முயற்சிக்கும். இறைவன் நாடும் வரை தொடர்ந்து குர்ஆனை மட்டுமே வழிகாட்டியாகக் கொண்டு செயல்படும்.

இறைவனின் நாட்டப்படி புதிய நினைவூட்டல் இதழ் தமிழகத்தில் குர்ஆனைப் பற்றிய ஒரு விவாத மேடையாகவும் உருவெடுத் துள்ளது. மேலும் அது ஒரு குர்ஆன் ஆய்வு மையமாகவும் பரிணமித்து வருகிறது. எல்லாம் வல்ல கடவுளுக்கே எல்லாப் புகழும்.

இந்த இடத்தில் நாம் ஒன்றை நம் வாசகர்களுக்கு நினைவூட்ட விரும்புகிறோம். புதிய நினைவூட்டல் ஒரு மாத இதழே அன்றி மற்றொரு மார்க்க ஆதாரம் அல்ல. ஒவ்வொருவரும் குர்ஆனை நேரடியாக அணுக வேண்டும் என்பதே நம் விருப்பம். இறைவன் குர்ஆனைக் கற்றுக் கொடுக்கிறார் (55:1-2) என்பதை நம்பி, அனைவரும் குர்ஆனை நேரடியாக அணுகி அதிலிருந்து கற்றுக் கொள்ள வேண்டும். புதிய நினைவூட்டலில் கூறப்படும் விஷயங்களைக் குர்ஆ னில் ஒப்பிட்டுப்பார்த்து சிந்தித்து விளங்கிக் கொள்ள வேண்டும். மனிதர்கள் தவறு செய்யக் கூடியவர்கள். எனவே மனிதர்களால் நடத்தப்படும் இவ்விதழும் அதற்கு விதிவிலக்கல்ல. புதிய நினை வூட்டலில் எழுத்துப் பிழைகள், கருத்துப் பிழைகள் ஆகியவை நேரிட்டிருக்கின்றன.
அனைத்தையும் அறிந்தவரான இறைவனால் நம் கவனத்திற்குக் காட்டப்படாத பிழைகளும் இருக்கலாம்.

குர்ஆன் மட்டுமே இறைவனின் வார்த்தைகள். அவை மட்டுமே தவறேயில்லாதது. புதிய நினைவூ ட்டலின் கூற்றுக்கள் குர்ஆனுக்கு முரண்படுமாயின் அவையும் தவறானவையே, புறக்கணிக்கப்பட வேண்டியவையே.

மேலும் குர்ஆனைத் தவிர வேறு எதுவும் மார்க்க ஆதாரம் ஆகாது என்பதில் ரஷாத் கலீஃபாவின் கூற்றுக்களும் அடங்கவே செய்யும். ரஷாத் கலீஃபாவின் தவறுகளும் அவருடைய அபிப்பிராயங்களும் மார்க்க ஆதாரம் ஆகாது. இறைவன் குர்ஆனில் அமைத்திருந்த இரகசியச் செய்தியான 19 என்னும் மாபெரும் அற்புதத்தை இறைவனின் அனுமதியோடு திரைவிலக்கி உலகுக்குக் காட்டியதும், அதன் மூலம் குர்ஆனை மெய்ப்பித்து அது மட்டுமே மார்க்க ஆதாரம் என்று நிரூபித்ததும் மட்டுமே ரஷாதின் இறைப்பணி. (Mission) அவர் கூறிய மற்றவை அனைத்தும் அவர் குர்ஆனிலிருந்து பெற்றவையே. அவற்றை நாமும் குர்ஆனிலிருந்து தான் பெறவேண்டும். அவர் கூறும் விஷயங்களை அவர் எந்த வசனங்களின் அடிப்படையில் கூறுகிறார் என்று நாமும் குர்ஆனில் சரிபார்த்து 'சிந்தித்து விளங்கிக் கொள்ள வேண்டும். அவர் கூறும் விஷயங்களில் தவறானதாகவோ, குர்ஆனுக்கு முரணானதாகவோ ஏதேனும் இருக்குமானால் அவை நிச்சயம் புறக்கணிக்கப்பட வேண்டியவையே.ஏனெனில் ரஷாத்

தன் வாழ்நாளை குர்ஆனைத் தவிர வேறு எதையும் பின்பற்றுவது ஷிர்க் (இணைவைப்பு என்பதைப் பிரசாரம் செய்வதற்கே அர்ப்பணித்தார்.

எனவே தூதர் ரஷாத் கலீஃபாவைப் பின்பற்றுபவர்கள் குர்ஆனை மட்டுமே பின்பற்ற வேண்டும். ரஷாத் கலீஃபாவின் கூற்றுக்கள் அனைத்தும் மார்க்க ஆதாரம் என்று கூறினால் அவர்கள் முஹம்மதியர்கள் என்பதைப்போல் ரஷாதிய்யர்கள் என்றே அழைக்கப்படுவார்கள். அவர்கள் தூதர் கூறியவற்றைக் கேட்ட செவிடர்கள் போலவும் குருடர்கள் போல்வுமே ஆவார்கள். நம்பிக்கையாளர்கள் இறைவனின் வார்த்தைகளைக் கூட செவிடர்கள் போலவும் குருடர்கள் போலவும் அணுகக் கூடாது என்று குர்ஆன் கற்றுத் தருகிறது. மேலும் எந்தத் தகவலையும் நாமே சரிபார்த்துக் கொள்ள வேண்டும் என்றும் அது நமக்கு வழிகாட்டுகிறது. எனவே ரஷாத் கலீஃபாவின் கூற்றுக்களையும் நாம் குர்ஆனில் சரிபார்த்தே ஏற்றுக் கொள்ள வேண்டும்.

## குர்ஆன் மட்டுமே நிரந்தர தூதர்

(3:101, 5:15, 11:1-3, 65:10-11)

மற்றத் தூதர்களைப் போலவே ரஷாத் கலீஃபாவும் சென்று விட்ட ஒரு தூதர். எல்லாம் வல்ல இறைவன் குர்ஆனைத்தான் நிரந்தரத் தூதராக ஆக்கியுள்ளார். அது மட்டுமே கியாம (இறுதி) நாள் வரை பாதுகாப்புடன் இருந்து மக்களுக்கு வழிகாட்டும். அதுவே தொடர்ந்து உயிருடன் இருக்கும் தூதர் ஆகும். மனிதத் தூதர்கள் இறந்து விட்ட பின்னரும் அது தொடர்ந்து மக்களுக்கு வழிகாட்டிக் கொண்டிருக்கிறது. இறுதி வேதம் தூதர்களின் தவறுகளையும் சுட்டிக்காட்டத் தவறுவதில்லை. முஹம்மதின் தவறுகளை சுட்டிக் காட்டிய குர்ஆன் ரஷாத்தின் தவறுகளையும் சுட்டிக்காட்டி விடும். மேலும் தூதர்களுக்குக் கட்டுப்படுவது என்பது சரியானவற்றில் நன்மை யானவற்றில் மட்டுமே, என்று குர்ஆன் நமக்கு வழிகாட்டுகிறது. தூதர்களின் தவறுகள் பின்பற்றப்படக் கூடாது.

ஏனெனில் தூதர்களும் நம்மைப் போன்ற (தவறுகள் செய்யக்கூடிய) மனிதர்களே. தூதர்கள் தவறு செய்யாதவர்களாக, எல்லாம் அறிந்தவர்களாக இருக்க வேண்டும்

என்று எதிர்பார்ப்பவர்கள் இறைவனுக்கு இணைவைத்தவர்களாக ஆவார்கள். ஏனெனில் தவறே செய்யாதவர் இறைவன் மட்டுமே. தவிரவும், புதிய நினைவூட்டல் ஒரு பெருந்தகவல் களஞ்சியத்தை தன் வசம் வைத்துள்ளது. அதில் ஏராளமான செய்திகள் இருக்கின்றன. அவற்றிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பல தகவல்களை வரிசைப்படுத்தி வெளியிட்டு வருகிறது. இவ்விதழ் எங்கள் தகவல் கருவூலம் இரகசியமானதுமல்ல.

அவை submission.org, quran.org, 19.org, kadavulmattum.org ஆகிய, இணைய தளங்கள் ஆகும். அவை அனைத்தும் ஆங்கிலத்தில் இருப்பதால் தமிழ் மட்டும் அறிந்த சமூகத்திற்குக் குர்ஆனின் புதிய நினைவூட்டல்களை எடுத்துரைப்பதே எம் நோக்கம் ஆகும்.

அரபியில் இருப்பதே அல்லாஹ் இறக்கிய குர்ஆன். - அது பாதுகாக்கப்பட்டதாக இருக்கிறது. அதற்கு விளக்கங்கள் யார் கூறினாலும் செவியேற்று அவற்றில் சிறந்ததை எடுத்துச் செயல்படுவதுதான் நேர்வழி என்றும் அறிவுடைமை என்றும் இறைவன் கூறுகிறார். மேலும் எது சிறந்தது என்று பிரித்தறியும் ஆற்றலையும நம்பிக்கையாளர்களுக்குத் தந்திருப்பதாகக் கூறுகிறார். வாசகர்களை ஏராளமான, சுவாரசியமான தகவல்களை அறியக் காத்திருக்குமாறு வாழ்த்தி புதிய நினைவூட்டல் தொடர்ந்து குர்ஆன் வழியில் செல்கிறது.

******

**ஏனெனில் தூதர்களும் நம்மைப் போன்ற (தவறுகள் செய்யக்கூடிய) மனிதர்களே. தூதர்கள் தவறு செய்யாதவர்களாக, எல்லாம் அறிந்தவர்களாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பவர்கள் இறைவனுக்கு இணைவைத்தவர்களாக ஆவார்கள். ஏனெனில் தவறே செய்யாதவர் இறைவன் மட்டுமே.**

# நிச்சயமாக நானும் உங்களைப் போன்ற ஒரு மனிதனே.

நீர் சொல்வீராக நிச்சயமாக நான் உங்களைப் போன்ற ஒரு மனிதனே!' நிச்சயமாக உங்களுடைய கடவுள் ஒரே கடவுள்தான் என்று எனக்கு வஹீ அறிவிக்கப்பட்டிருக்கிறது ...... (18:110)

இறைவனின அனைத்துத் தூதர்களும், எல்லா நபிமார்களும் (வேதம் வழங்கப்பட்ட தூதர்கள்) தங்கள் சமூகத்தாரை நோக்கிக் கூறும் வாசகம் நானும் உங்களைப் போன்ற ஒரு மனிதனே என்பதுதான். (11:27, 54;24, 18:110)

ஆயினும் மக்களில் பெரும்பாலோர் இறைத்தூதர்களும் மற்ற மனிதர்களைப் போன்றே தவறுகள் செய்யக்கூடியவர்கள் என்ற கருத்தை ஏற்றுக் கொள்வதில்லை. ஏனெனில் அவர்கள், இறைத்தூதர்களை மனதிற்குள் இறைவனுக்கு இணையாக ஆக்கி வைத்துள்ளனர். அதாவது தவறுகளுக்கு அப்பாற்பட்டவர் என்ற இறைவனின் தனித்தன்மையை தூதர்களுக்கும் வழங்கியுள்ளனர். முந்திய தூதர்களை இணைவைத் தவர்கள் அடுத்து வந்த தூதர்களை ஏற்றுக் கொள்ள மறுப்பதன் காரணம் இதுதான். (40:34) மூஸாவை நம்பியவர்கள் யேசுவை நம்பவில்லை, யேசுவை இறைவனுக்கு இணையாக்கியவர்கள் முஹம்மதை ஏற்றுக் கொள்ளவில்லை. முஹம்மதை இறைவனுக்கு இணையாக ஆக்கியவர்கள் அடுத்து வந்த ரஷாத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. தூதர்களை இறைவனுக்கு இணை யாக்கும் ஒவ்வொருவரும் தாங்கள் இணைவைக்கும் தூதர்தான் கடவுளுக்கு மிக நெருக்கமானவர் என்றும் அனைத்தையும் அறிந்தவர் என்றும் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். குர்ஆன் கூற்றுப்படி இது இணைவைப்பு ஆகும். (39:3; 31)

மனிதர்கள் அனைவரும் தவறு செய்யக்கூடியவர்கள் என்பதில் நபிமார்களும் தூதர்களும் விலக்கானவர்கள் அல்லர். அனைத்து நபிமார்களும் தவறு செய்தவர்களே என்பதைக் குர்ஆன் குறிப்பிட்டுக் கூறுகிறது.

நூஹ் நபி (நோவா) இறை நிராகரிப்பளனான தன் மகன் மேல் அதிகப் பாசம் வைத்ததற்காகக்

கடவுளால் கண்டிக்கப்படுகிறார். (11:45 47) இப்றாஹீம் நபியும் அவருடைய தந்தை விஷயத்தில் இதற்காகக் கண்டிக்கப்படுகிறார் (60:4)

மூஸா நபி ஒரு மனிதனை கொலை செய்கிறார். யூனுஸ் நபி தன் தூதுத்துவத்தை விட்டுத் தப்பி ஓடுகிறார். யூஸுஃப் நபி தன் எஜமானரின் மனைவியின் வலையில் சிக்கி தவறு செய்ய இருந்தார்.. அய்யூப் நபி சாத்தானின் வலையில் சிக்கி நோய்க்கும் துன்பத்திற்கும் உள்ளானார்.

இவ்வாறு நபிமார்களின் தவறுகளை இறைவன் சுட்டிக்காட்டுவதன் நோக்கம் என்ன? அவர்களும் நம்மைப்போல் தவறுகள் செய்யக் கூடிய மனிதர்களே, தவறுக்கு அப்பாற்பட்டவர்கள் அல்லர், இறைவனுக்கு ஒரு சிறிது கூட இணையாக இருக்கும் தகுதி இல்லாதவர்கள். எனவே நாம் தூதர்களை இறைவனுக்கு இணையாக்கக் கூடாது என்பதை வலியுறுத்துவதாகவும் இருக்கலாம் அல்லவா?

"மானுடர்களை அவர்கள் சம்பாதித்த பாவங்களுக்காக கடவுள் தண்டித்தால் பூமியில் ஒரு உயிரையும் விட்டு வைத்திருக்க மாட்டார். ஆயினும் குறிப்பிட்ட தவணைவரை அவர்களுக்கு அவர் அவகாசம் அளிக்கிறார். அவர்கள் தவணை முடிந்து விட்டால், நிச்சயமாகக் கடவுள் தன் அடியார்களை உற்று நோக்கியவராக இருக்கிறார்." (35:45)

இவ்வசனத்திற்கு நபிமார்களும், தூதர்களும், நல்லடியார்களும் விதி விலக்கானவர்கள் அல்லவே! மேலும் மனிதர்கள் அனைவரும் இவ்வுலகின் சோதனையைத் தேர்ந்தெடுத்ததன் மூலம் அக்கிரமக்காரர் களாகவும், அறியாமை கொண்டவர் களாகவும் ஆனார்கள் என்று 33:73 கூறுவதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

மனிதர்களுக்கு அனுப்பப்பட்ட முந்தையத் தூதர்கள் அனைவரும் மனிதர்களே. பாவமே இழைக்க முடியாத வானவர்கள். அல்லர். அவர்கள் தங்கள் இறைப்பணியின் போது (Mission மற்ற மனிதர்களைப் போலவே வாழ்ந்தனர். அவர்களும் தவறு செய்தனர். சில சமயம் பெருந்தவறுகளையும் செய்தனர். அவர்களுடைய தவறுகள் இருவிளைவுகளை ஏற்படுத்தின.

ஒருபுறம், அவை நம்பிக்கையாளர்களுக்கு ஒரு

அருளாக அமைந்து உள்ளது. மற்றொரு புறம் நம்பிக் கையற்ற வர்களுக்கு சத்தியத்தை ஏற்றுக் கொள்ளாமல் இருப்பதற்கு ஒரு சாக்காகவும் (காரணம்) இணைவைக்கும் நயவஞ்சகர் களுக்கு ஒரு சோதனை யாகவும் அமைந்து விடுகிறது. நம்பிக்கையாளர்கள் தங்கள் கவனத்தை இறைவனின் பக்கம் முழுமையாகத் திருப்பி தூதர்களை இறைவனுக்கு இணைவைப் பதிலிருந்து தவிர்ந்து கொள்வார்கள்.

அதே சமயம், நிராகரிப்பவர்களும் நம்பமறுப்பவர்களும் தூதர்களின் தவறுகளையும் பலஹீனங்களையும் தங்களுடைய - நிராகரிப்புக்குக் காரணம் ஆக்கிக் கொள்வார்கள். இணைவைக்கும் நயவஞ்சகர்களோ தூதர்கள் - தவறுக்கு அப்பாற்ப, ட்டவர்கள் என்று கூறி மனிதத் தூதர்களின் தெளிவான தவறுகளையும் நியாயப்படுத்தி அவற்றை மிகுந்த ஞானம் உள்ள இறைவன் பால் சாட்டுவார்கள்.

நீங்கள் முஹம்மது நபியின் காலத்தில் வாழ்வதாகக் கற்பனை செய்து கொள்ளுங்கள். அவருக்குச் சில நண்பர்களும் ஏராளமான எதிரிகளும் உள்ளார்கள். அவரைப்பற்றியும், அவருடைய செய்தியைப்பற்றியும் பல முரண்பாடான தகவல்களைக் கேள்விப் படுகின்றீர்கள். அதே சமயம் அவருடைய சில பலஹீனங்களையும், குறை பாடுகளையும் நீங்கள் காண்கிறீர்கள்.

உதாரணமாக, ஒரு பணக்காரன் மேல் கவனம் செலுத்தி குருட்டு ஏழையைக் கடுகடுப்பதைக் காண்கிறீர்கள். (80:1-11), தன் மனைவியின் திருப்திக்காக இறைவன் ஆகுமாக் கியதை (ஹலால்) (ஹராம்) தடுத்துக் கொள்வதை அறிகின்றீர்கள். (60:1) மனிதர்களுக்கு அஞ்சி இறைவன் வெளிப்படுத்த இருப்பதை மறைக்க முயற்சி செய்வதை அறிகின்றீர்கள் (33:37) போதுமான அறிவைப் பெறுவதற்கு முன்னரே சில இறை வசனங்களை அவசரப்பட்டு அதிக மதிப்பீடு (Speculation) செய்வதாகவும் அறிகிறீர்கள் (20:114, 75:16-19). அவர் தன் கொள்கை விரோதிகளுக்கு விட்டுக் கொடுத்து சமாதானமாகப் போய்விட முனைவதைக் காண்கிறீர்கள் (17:74) அவருடைய நாட்டத்தில் சாத்தான் குறுக்கிட்டு அவருடைய பிரசாரத்தின் விளைவாக சமூகக் குழப்பங்களையும் உள்நாட்டுக் கலகங்களையும் காண்கிறீர்கள் (22:52-55).

அப்போது நீங்கள் என்ன

செய்வீர்கள்? நீங்கள் மூன்று விதங்களில் நடந்து கொள்ளலாம். முதலாவதாக, அவருடைய தூதுத்துவத்தை நீங்கள் ஏற்க மறுத்து விடலாம். இரண்டாவதாக, நம்மைப் போன்ற ஒரு மனிதர் இறைச்செய்தியுடன் வந்திருக்கிறார் என்று நீங்கள் ஏற்றுக் கொள்ளலாம். மூன்றாவதாக, அவரைத் தவறுகளே செய்யாதவர் என்று கருதி இறைவனுக்கு இணைவைத்து அவருடைய தவறுகளையும் குறை பாடுகளையும் நியாயப்படுத்தவோ நன்மை என்று கூறவோ முற்படலாம்.

தூதர்களின் தனிப்பட்ட தவறுகளினால் வெறுப்புற்று இறைச் செய்தியைப் புறக்கணிப்பவர்கள் தங்களைத் தாங்களே நஷ்டப்படுத்திக் கொள்கின்றனர். தூதர்களை ஏற்றுக் கொண்டு, அவர்களை தவறே செய்யா தவர்கள் என்று கருதி அவர்களை இறைவனுக்கு இணையாக்கு பவர்களும் தூதர்களின் தவறுகளை நியாயப்படுத்து பவர்களும் தூதர்களின் செய்தி கிடைத்த பிறகும் அதன் பலனைப் பெறாதவர்களாக ஆகி விடுகின்றனர். நடுநிலையுடன் தூதர்களின் தவறுகளை ஒதுக்கிவிட்டு தூதர்களின் செய்தியைப் பின்பற்றுபவர்களே நேரான வழியில் தொடர்ந்து செல்கின்றனர்.

முந்தய தூதர்களைப் போலவே ரஷத்தும் தவறுகள் செய்திருக்கிறார். அவருடைய தவறுகளை குர்ஆன் சுட்டிக்காட்டும் போது அவற்றை விட்டு விட்டு நாம் தொடர்ந்து குர்ஆனைப் பின்பற்ற வேண்டும். ரஷத்தின் இறைப்பணி (Mission) குர்ஆனை மட்டும் பின்பற்றுங்கள் என்று பிரசாரம் செய்வதாகவே இருந்தது என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

ரஷத்தும் நம்மைப் போன்ற ஒரு மனிதர்தான். ஒரு மனிதர் என்ற நிலையில் அவரும் தவறுகள் செய்யக் கூடியவராகவே இருந்தார். நம் இதழில் ரஷாத்தின் தவறுகளும், குர்ஆன் ஒளியில் நடுநிலையுடன் எடுத்துக் காட்டப்படும். நாம் அவருடைய மனிதத் தவறுகளை ஒதுக்கி வைத்து விட்டு அவருடைய செய்தியான இறைவனை மட்டுமே வணங்கி வழிபடவேண்டும், குர்ஆன் மட்டுமே மார்க்க ஆதாரமாகப் பின்பற்றப்பட வேண்டும் என்பதை ஏற்றுக் கொண்டு அதன் வழி நடப்போம். இறைவன் நாட்டப்படி.

○○○

ஆ. ர்

# சொர்க்கத்திற்கு அழைத்துச் செல்லும் ஆலிம்கள் !!??

அந்தப்பள்ளி வாசல் கலகலத்துக் கொண்டிருந்தது. உலமாக்களின் மாநாடு, சிறப்புரை, மக்கள் கூட்டம் நிரம்பி வழிந்தது.

பட்டுப் போன்ற வெண்ணிற உடை, தலையில் அழகிய தொப்பி, முகத்தில் நீண்ட தாடி, முகங்களில் தாங்கள் கற்றறிந்த ஆலிம்கள் என்ற பெருமிதம் ஒவ்வொரு ஆலிமும் மேடையேறி ஹதீஸ்களைக் கூறி மக்களை பிரமிக்க வைத்தனர். பல ஆலிம்களின் பொய்யுரைகளை, தெரிந்திருந்தும் சில ஆலிமகள் காட்டிக் கொடுக்க விரும்பாமல் கண்டு கொள்ளாமல் அமர்ந்திருந்தனர்.

கற்றறிந்த இவ்வளவு பேர்கள் சொல்வது நிச்சயம் உண்மையாகத்தான் இருக்கும் என்று மக்கள் கூட்டம் வாய் பொத்தி சிரம் தாழ்ந்துக் கேட்டுக் கொண்டிருந்தது.

முதல் ஆலிம் : குர்ஆனைக் காட்டிலும் ஹதீஸ்கள் ஒரு படி உயர்வானவை, ஏனென்றால் ஹதீஸ்கள் தான் குர்ஆனுக்கே விளக்கமாக உள்ள து!.

இரண்டாமவர் : முஹம்மது நபி பிறந்திருக்காவிட்டால் குர்ஆன் வந்தே இருக்காது!

மூன்றாமவர்: இறைவனை யாருக்கு தெரியும் நபி முஹம்மது இல்லை என்றால்!

நான்காமவர்: நபி பெருமானாருக்கு நிழல் விழுவதில்லை அவர் சாதாரண மனிதர் அல்ல!

ஐந்தாமவர் : பிஸ்மில்லா ரஹ்மானிர் ரஹீம் என்ற ஒரு வாக்கியத்திற்கு ஒரு லட்சம் அர்த்தங்கள் இருக்கின்றன.

ஆறாமவர் : குர்ஆன் ஆலிம்களுக்கு மட்டுமே புரியும். தமிழில் படித்து சிந்திக்கிறேன் என்று சிலர் கிளம்பியுள்ளனர். கடைசியில் அவர்கள் காஃபீர்களாகி விடுவார்கள்.

ஏழாமவர் : ஆலிம்கள் தான் இதுநாளும் குர்ஆனை பாதுகாத்து வருகிறார்கள். இல்லை என்றால் இந்நேரம் அழிந்து போயிருக்கும். நமக்கு முழுசாக கிடைத்திருக்காது.

எட்டாமவர் : குர்ஆன் தெளிவாக இல்லை. முரண்பாடுகள் கொண்டுள்ளது. விளங்காது, குர்ஆனை மட்டும் பின்பற்றுவது வழிகேடாகும்!

ஒன்பதாமவர் : ஒரு ஆலிம் ஏழு நபர்களை சிபாரிசு செய்து சொர்க்கத்திற்கு அழைத்துச் செல்ல முடியும்!

பத்தாமவர் : உலமாக்கள் சொற்படி நடந்தாலே போதும், நரகத்திலிருந்து தப்பித்துக் கொள்ளலாம்.

மேற்கூறிய அனைத்துப் பொய்களையும் குர்ஆனுக்கு எதிராக கூறிய பெருமையடித்துக் கொண்டிருந்த ஆலிம்களையும், குர்ஆனைக் கொண்டு சிந்தித்து, சரி-தவறை பிரித்தரியாமல், ஆட்டுமந்தைகள் போல் பலஹீனர்களாக அவர்களை பின்பற்றிய கூட்டத்தினரையும் பற்றி குர்ஆன் கூறுவதை கவனியுங்கள்.

14:21 அன்றியும், அனைவரும் {வெளிப்பட்டு மறுமைநாளில்) அல்லாஹ்வின் சமூகத்தில் நிற்பார்கள்; அப்போது, (இவ்வுலகில்) பலஹீனமாக இருந் தவர்கள் (இவ்வுலகில்) பெருமை அடித்துக் கொண்டி ருந்தவர்களை நோக்கி : "நிச்சயமாக நாங்கள் (உலகில்) உங்களைப் பின் தொடர்பவர்களாக இருந்தோம்; இப்போது நீங்கள் அல்லாஹ் (வழங்க இருக்கும்) வேதனையிலிருந்து எதையேனும் எங்களை விட்டும் தடுக்க முடியுமா?" என்று கேட்பார்கள்; (அதற்கு) அவர்கள். அல்லாஹ் எங்களுக்கு (ஏதாவது) வழியைக் காட்டினால் நாங்கள் அவ்வழியை உங்களுக்குக் காட்டுவோம்; (தப்பிக்க வழியே அன்றி, வேதனையை அஞ்சி) நாம் பதறிக் கலங்கினாலும், அல்லது பொறுமையாக இருந்தாலும் நமக்கு ஒன்றுதான்; வேறு புகலிடமே நமக்கு இல்லையே!" என்று (கை சேதப்பட்டுக் கூறுவார்கள்.

14:22 : (மறுமையில் இவர்கள் பற்றித்) தீர்ப்புக் கூறப்பெற்றதும் ஷைத்தான் (இவர்களை நோக்கி) "நிச்சயமாக அல்லாஹ் உங்களுக்கு உண்மையான வாக்குறுதியையே வாக்களித்திருந்தோன்; நானும் உங்களுக்கு வாக்களித்திருந்தேன்; ஆனால் நான் உங்களுக்குக் கொடுத்த வாக்கில் மாறு செய்துவிட்டேன். நான் உங்களை அழைத்தேன்; அப்போது நீங்கள் . என் அழைப்பினை ஏற்றுக் கொண்டீர்கள் என்பதைத் தவிர - எனக்கு உங்கள் மீது எந்த அதிகாரமுமில்லை; ஆகவே நீங்கள் என்னை நிந்திக்காதீர்கள்; உங்களையே நீங்கள் நிந்தித்துக் கொள்ளுங்கள்; உங்களை நான் காப்பாற்றுபவன் இல்லை; நீங்களும் என்னைக் காப்பாற்று கிறவர்களில்லை. நீங்கள் முன்னால் என்னை (அல்லாஹ்வுக்கு) இணையாக்கிக் கொண்டி ருந்ததையும், நிச்சயமாக நான் நிராகரித்து விட்டேன் - நிச்சயமாக அக்கிர மக்காரர்களுக்கே நோவினை மிக்க வேதனை உண்டு" என்று கூறுவான்.

# இறைவனின் முத்திரை - 19

குர்ஆன் முஸ்லிம்களுக்கு மட்டுமான வேதம் அல்ல; இன்றைய பெயர்தாங்கி முஸ்லிம்கள் பின் பற்றுவதும் குர்ஆனை அல்ல; மேலும் அல்குர்ஆன் அகிலங்களின் இரட்சகரான அந்த வல்லமை மிக்க ஒரே இறைவனால் அருளப்பட்ட வேதம்தான்; அது மனித சமுதாயம் முழுமைக்கும் பொதுவானது; சரியானது; ஆதாரபூர்வமானது; மேலும் அணுவளவும் சிதைத்து விட முடியாதவாறு பாதுகாக்கப்பட்டு உள்ளது. இவை அனைத்தையும் மனித சமூகத்திற்கு உணர்த்தும் வகையில் குர்ஆனில் இறைவனால் அமைக்கப்பட்டிருக்கும் மாபெரும் அற்புதமான 19ன் கணிதக் கட்டமைப்பு பற்றிய தகவல்களை நாம் இங்கே கண்டு வருகிறோம்.

அல்-குர்ஆன் மனித சக்திக்கு அப்பாற்பட்ட வகையில் ஓர் அற்புதமான கணித அமைப்பில் கட்டப் பட்டிருக்கிறது முதன்மையான வரும் இறுதியானவருமான இறைவனைக் குறிக்கும் வகையில் எண்களில் முதன்மையான ஒன்றையும் இறுதியான ஒன்பதையும் கொண்ட 19 என்ற எண்தான் அதன் பொதுவான எண்ணாகும். கருத்துச் செறிவுடன் கூடிய ஒரு புத்தகம் ஒரு குறிப்பிட்ட எண்ணால் கட்டமைக்கப்படுவது என்ற விஷயம் மனித சமுதாயத்தின் சக்திக்கு அப்பாற்பட்டதாகும். இதுவரை மனித சமூகம் இத்தகைய ஒரு விஷயத்தை செய்வதைப் பற்றி யோசித்துக் கூட பார்த்ததில்லை.

இக்கட்டமைப்பின் தூண்களாக குர்ஆனில் உள்ள முத்திரை எழுத்துக்கள் திகழ்கிறது. அதாவது, குர்ஆனில் உள்ள 29 அத்தியாயங்களின் துவக்கத்தில் சில குறிப்பிட்ட எழுத்துக்கள் காணப்படு கின்றன. அவ்வெழுத்துக்களுக்கு அர்த்தம் என்ன? என்று அவை ஏன் அங்கே அமைக்கப்பட்டிருக் கின்றன? அதன் தாத்பர்யம் என்ன? போன்ற கேள்விகளுக்கான பதில் 1974 வரை மனித சமூகம் அறியாத ஒன்றாகவே இருந்து, வந்தது. குர்ஆனை வார்த்தைக்கு வார்த்தை எழுத்துக்கு எழுத்து அணு அணுவாக ஆராய்ச்சி செய்தவர்களுக்கும், அதனை அன்றாடம் ஓதி வந்த முஸ்லிம்கள் பலருக்கும் இது ஒரு புதிராகவே இருந்து வந்தது.

இப்போது முத்திரை எழுத்துக்களுக்கு விளக்கம் என்ன என்பது உலகம் அறிந்த ஒன்றாக மாறிவிட்டது. தன்வேதத்திற்கான ஆதாரங்களை மனித சமூகத்திற்கு அளித்த இறைவன் எல்லா வல்லமையும் நிறைந்தவர் என்பது கண்கூடாக நிரூபிக்கப்பட்டு விட்டது.

முத்திரை எழுத்துக்களைக் கொண்டு துவங்கும் அத்தியா யங்களில் அக்குறிப்பிட்ட எழுத் துக்கள் வெவ்வெறு விதங்களில் 19ன் பெருக்குத் தொகைகளாகவே அமைக்கப்பட்டிருக்கின்றன. அவை அமைக்கப்பட்டிருக்கும் விதத்தை அறிந்து கொள்ள, அறிந்து கொள்ள ஆச்சர்யமும், பரவசமும் நம்பிக் கையும் உறுதியும் மேலோங் குகிறது. இதுவரை நாம் 'அலிஃப்லாம்மீம்' என்ற எழுத்துக்கள் கொண்டு துவங்கும் ஆறு அத்தியாயங்களும் 'அலிஃப்லாம்ரா' என்று துவங்கும் ஆறு அத்தியாயங்களும், 'அல்ஃப் லாம்மீம்ரா', 'அலிஃப் லாம்மீம் ஸாத்', 'ஸாத்', 'காஃப் ஹா யா ஐன் ஸாத்' ஆகிய எழுத்துக்கள் கொண்ட அத்தியாயங்களும் எவ்வாறு கட்டமைக்கப்பட்டுள்ளன என்பது குறித்த தகவல்களைக் கண்டோம். இப்போது ஹாமீம் ஆகிய இரு எழுத்துக்கள் கொண்டு துவங்கும் ஏழு அத்தியாயங்களின் அற்புத அமைப்பைக் காண்போம். இவற்றில் ஒன்றில் ஹாமீம் என்பதுடன் ஐன் ஸீன் காஃப் என்ற மூன்று எழுத்துக்கள் கொண்ட மற்றுமொரு வகை முத்திரை எழுத்துக்கள் காணப்படுகின்றன.

குர்ஆனின் அத்தியாயங்கள் 40, 41, 42, 43, 44, 45, 46, ஆகியவை ஹாமீம் என்ற எழுத்துக்களைக் கொண்டு துவங்குகின்றன. இவ்வத்தியாயங்கள் அனைத்திலும் இடம்பெறும் ஹாமீம் ஆகிய எழுத்துக்கள் அனைத்தையும் கூட்டினால் நமக்குக் கிடைப்பது

2147=19X113!

கீழே பட்டியல் காண்க

எழுத்துக்கள் இடம்பெறும் முறைகள்

| சூரா எண் | ஹா-மீம் | ஹா+மீம் |
|---|---|---|
| 40 | 64-380 | 444 |
| 41 | 48-276 | 324 |
| 42 | 53-300 | 353 |
| 43 | 44-324 | 368 |
| 44 | 16-150 | 166 |
| 45 | 31-200 | 231 |
| 46 | 36-225 | 261 |
| | | 2147=19 X 113 ! |

தொடர்ந்து வரும் இந்த ஏழு அத்தியாயங்களிலும் இடம்பெறும் ஹா, மீம் ஆகிய இரு எழுத்துக்களில் ஒன்று கூடினாலோ அல்லது குறைந்தாலோ இந்த எண்ணிக்கை வராது. இத்தகைய கணித அமைப்பில் ஒரு புத்தகத்தை மனிதர்கள் அமைத்தால் அதில் எந்தக் கருத்தும் இருக்காது. எண்ணிக்கையில் கவனம் செலுத்தினால் கருத்துக்களும், வார்த்தைகளும், எழுத்துக்களும் அடிபடும். கருத்தில் வார்த்தைகளில், எழுத்துக்களில் கவனம் செலுத்தினால் கணிதக்கட்டமைப்பு அடிபட்டுப் போகும். இவ்விரண்டையும் சேர்த்துச் செய்வது என்பது நிச்சயம் மனித சக்திக்கு அப்பாற்பட்ட ஒன்றே என்பதை எண்களையும் எழுத்துக்களையும் அறிந்தவர்கள் நிச்சயம் புரிந்து கொள்ளவும், உணர்ந்து கொள்ளவும் முடியும்.

தனித்தனியாக ஒவ்வோர் அத்தியாயத்தையும் முத்திரை எழுத்துக்களில் கட்டுவது ஒரு வகை. அவற்றை நாம் இதற்கு முன்னர் கண்டோம். இங்கே தொடர்ந்து ஏழு அத்தியாயங்களையும் ஒன்றி ணைத்துக் கட்டியிருப்பது அதையும் விடப்பெரியதும், நீ செய்வதற்கு இயலாத ஒன்றும் ஆகும்.

இது 19 எனும் அவ்வற்புதத்தின் மற்றொரு பரிமாணம் ஆகும்.

இந்த ஏழு அத்தியாயங்களில் ஒன்றான 42ல் 'ஹாமீம்' (முதல் வசனம்) என்ற ஒரு வகையைத் தொடர்ந்து ‘ஐன், ஸீன் காஃப்', (ASQ) (, இரண்டாம் வசனம்) என்ற மூன்று எழுத்துக்களைக் கொண்ட மற்றொரு வகை இடம் பெறுகிறது. அத். 42ல் இடம்பெறும் இவ்வெழுத்துக்களின் எண்ணிக்கை 209 = 19 X 11! இது மற்றொரு அற்புதம் ஆகும்.

| | | |
|---|---|---|
| ஐன் | = | 98 |
| ஸீன் | = | 54 |
| காஃப் | = | 57 |
| | | 209 = 19 X 11. |

இதில் இடம் பெறும் 'காஃப்' என்ற எழுத்து, 'காஃப்' என்ற ஒரு எழுத்து மட்டும் இடம்பெறும் 50வது அத்தியாயத்துடன் பின்னிப் பிணைந்து மற்றொரு அற்புதத்தை நிகழ்த்துவதை நாம் ஏற்கனவே கண்டிருக்கிறோம். 'ஹாமீம்' பற்றிய அற்புதங்களும் இத்துடன் முடிந்து விடவில்லை . அதனைத் தொடரும் முன்; இங்கே நாம் ஒரு விஷயத்தை நினைவு கூர்வது மிகவும் பொருத்தமாக இருக்கும்.

இன்றையத் தபால் அமைப்பு நடைமுறையில் இல்லாத அக்கால கட்டத்தில் கடிதங்கள் கொடுத்தனுப் பப்படும் போது அவை மற்றவர்களால் படிக்கப்படக் கூடிய சாத்தியம் அதிகம் இருந்தது. எனவே அக்காலத்தில் கடிதங்கள் எழுதும் போது, யார் படித்தாலும் பரவாயில்லை என்ற விஷயங்களை அனைவருக்கும் புரியக்கூடிய இயல்பான மொழியமைப்பில் எழுதிவிட்டு, இரகசியமான விஷயங்களை எழுதுவதற்கு சிற்சில எழுத்துக்களைக் கொண்ட சங்கேதக் குறியீட்டை (Secret Code) அமைத்துக் கொள்வர்.

இக்குறியீடுகளின் விளக்கத்தை அனுப்புபவரும் கடிதத்தை யார் யார் படிக்க வேண்டுமோ அவர்களும் மட்டுமே அறிந்திருப்பர். இத்தகைய வழக்கத்தை அரபியரும் வைத்திருந்ததை அரபுகளின் நாடோடிக் கதைகள் கூறுகின்றன!

இவ்விதமாக, இறைவனிடமிருந்து வந்த இறுதிக் கடிதமான அல்குர்ஆனும் அனைவர்க்கும் புரியக்கூடிய மொழியமைப்பில் அமைந்திருந்தாலும் ஒரு இரகசியக் குறியீடு ஒன்றையும், அதனுள் சேர்த்து சில செய்திகளையும் கொண்டிருந்தது.

குர்ஆனில் இடம்பெறும் முத்திரை எழுத்துக்கள் அத்தகைய ஒரு இரகசியக் குறியீடே என்றும் அதன் உள்ளிருக்கும் செய்தி என்ன என்பதையும் இப்போது நாம் அறிந்திருக்கிறோம். அக்குறியீட்டில் உள்ள செய்திகள் இரண்டு. முதன்மையாக, மனித சக்திக்கு அப்பாற்பட்ட வகையில் கட்டமைக்கப் பட்டிருப்பதால் அம்முத்திரை எழுத்துக்களைக் கொண்ட கடிதம் (இறுதி வேதம் - அல்குர்ஆன்) இறைவனிடமிருந்து நம்பிக்கையாளர்களுக்கு அனுப்பப் பட்டதுதான் என்பதை உறுதி செய்வது. மற்றொன்று, எந்த ஒரு எண்ணையோ, எழுத்தையோ சேர்த்தாலோ நீக்கினாலோ அல்லது இடம் மாற்றினாலோ உடனடியாக வெளிப்படுத்தக் கூடிய வகையில் இக்கட்டமைப்பு அமைக்கப் பட்டிருப்பதால் இறைவனின் கடிதமான அல்குர்ஆன் சற்றும் சிதைக்க முடியாதவாறு பாதுகாக் கப்பட்டுள்ளது என்பதை உலகுக்கு அறிவிப்பது. இறைவன் அமைத்த இந்த இரகசியக் குறியீடு அறிவற்ற நிராகரிப்போர் விளங்கிக் கொள்ள முடியாதபடி அறிவுடைய நம்பிக்கை யாளர்கள் மட்டுமே புரிந்து கொள்ளும்படி அமைக்கப்ப

ட்டிருப்பதால் . இதன் மூலம் நம்பிக்கையாளர்கள் நயவஞ்சகர்கள் யார் என்பதையும் நாம் பிரித்தறிய முடிகிறது. 74 : 31 ல் இறைவன் கூறுவது போல் இவ்வற்புதம் பன்முகப் பரிமாணம் கொண்டதாக அமைந்துள்ளது.

இன்றைய சமூகம் எண், எழுத்து ஆகிய இரண்டிலும் நன்கு அறிவுபெற்ற சமூகமாக இருப்பதும், இத்தருணத்தில் வெளிப்பட்டு நிலைத்து நிற்கும் இறைவனின் இவ்வற்புதம் எண்ணும் எழுத்தும் பின்னிப் பிணைந்த ஒன்றாக இருப்பதும் நமக்கு ஒரு விஷயத்தை நினைவூட்டுகிறது.

அதாவது, இறைவன் காட்டும் அற்புத ஆதாரங்கள் அந்தத் தலைமுறையினருக்கு அந்த சமூகத்திற்கு ஏற்பவே அமைகிறது. மூஸாவின் காலத்தில் மக்கள் மந்திர தந்திரங்களை நன்கு கற்றிருந்தனர், பல வித்தைகளையும் செய்து காட்டினர். மூஸாவின் அற்புதம் அவர்களுடைய மந்திர தந்திரங்களையெல்லாம் மிகைப் பதாக அமைந்தது. யேசுவின் காலத்தில் மருத்துவம் வளர்ச்சி யடைந்து கொண்டிருந்தது. நோய்களை குணப்படுத்தக் கூடிய வைத்தியர்கள் மக்கள் மத்தியில் மதிப்புப் பெற்றிருந்தனர். எனவே யேசு அவர்களையெல்லாம் மிகைக்கும் வண்ணம் இறை அனுமதியுடன் குருடர்களுக்கு பார்வை அளித்தார், குஷ்டரோகி களைக் குணப்படுத்தினார். மரணித்து விட்ட ஒருவருக்கு உயிரையும் அளித்தார். அதுவே அவர். இறைத்தூதர் என்பதற்கு அத்தாட்சியாக அமைந்தது.

முஹம்மதின் காலத்தில் அரபியர்கள் இலக்கியத்திலும், கவிதையிலும் புலமை மிக்கவர்களாக இருந்தனர். மொழி கற்றவர்கள் அவர்களிடையே மிகவும் மதிக்கப்பட்டார்கள். எனவே முஹம்மதின் அற்புதமான குர்ஆன் இலக்கிய நயத்திலும் கவிதை வடிவிலும் அவர்களை மிகைக்கக் கூடியதாக இருந்தது. அதுவே முஹம்மதுக்கான ஆதாரமாக அமைந்தது.

இன்றையக் காலம் விஞ்ஞானக்காலம், கம்ப்யூட்டர் காலம், இன்று பழைய ஆதாரங்கள் எல்லாம் செல்லாது. எண்ணையும் எழுத்தையும் கம்ப்யூட்டரில் ஏற்றி அவற்றைக் கட்டி ஆண்டு வரும் சமூகம் - இன்றைய சமூகம்.

விஞ்ஞானவாதம், நாத்திகவாதம், விதண்டாவாதம் என ஏராளமான வாதங்களை வைத்திருப்பவர்கள் இன்றைய மக்கள். பழைய ஆதாரங்கள் இவர்களைத் திருப்தி செய்யாது. எனவே இன்றைய சமூகத்திற்கேற்றவாறு இறைவனின் இவ்வற்புதம் எண்ணாலும் எழுத்தாலும் அமைக்கப்பட்டுள்ளது. இதைப் போன்ற ஒன்றை அவர்களால் ஒரு போதும் செய்ய முடியாது. இது அவர்களுக்கு நன்கு தெரியும். முடிந்திருந்தால் அப்படி ஒரு முயற்சியில் அவர்கள் இறங்காமலா இருந்திருப்பார்கள்? இவ்வற்புதம் நிரூபிக்கும் குர்ஆனின் செய்திகளை மறுக்கத் துடித்துக் கொண்டிருப்போர் இதைப்போன்ற ஒன்றைச் செய்ய முடியுமானால், உடனே இவ்வற்புதத்தைப் போன்ற ஒன்றைச் செய்து அது கூறும் செய்தியைப் பொய்யாக்கி விட முனைவார்கள்.

1974ல் இவ்வற்புதம் வெளிப்படுத்தப்பட்டது. மேலும் அத்துடன் மனித சமூகத்திற்கு ஆச்சர்யமும், கோபமும், அச்சமும் ஆறுதலும் தரக்கூடிய பல செய்திகளும் வெளிப் படுத்தப் பட்டன. இதனைப் பொய் ப்பிக்க முனையும் கோபக் காரர்கள் இன்று வரை இது போன்ற ஒன்றைச் செய்யும் முயற்சியில் இறங்கவில்லை. தோல் விதான் என்று நிச்சயமாகத் தெரிந்தால் யாரும் அந்த முயற்சியில் இறங்கமாட்டார்கள் என்பதென்னவோ உண்மைதான். ஆயினும் நாம் அவர்கள் அத்தகைய ஒரு முயற்சியில் இறங்க வேண்டுமென்றே கேட்டுக் கொள்ள விரும்புகிறோம். கம்ப்யூட்டர் இருக்கிறது. உலக முழுமையும் இணைக்கும் வலைத்தளங்கள் (Internet) அனைத்துமாக அறிவிலும், விஞ்ஞானத்திலும் மிகைத்திருக்கும் வல்லுநர்கள் உள்ள னர்.

தகவல் தொடர்பில் உலகமே அண்டை வீட்டைப்போல் ஆகி விட்டது. இன்று மானிடனின் விரல் முனைகளில் பூமிப்பந்து சுழல்வதைப் போல தகவல் தொடர்பு உள்ளது. அத்தகைய ஒரு முயற்சியில் இறங்க இன்னும் என்ன தயக்கம்? நீங்கள் முயன்று தோற்றுவிட்ட பின்னர்தானே பாமர உலகம் அதனைப் புரிந்து கொள்ளும்?

அது கூறும் செய்திக்குச் செவிசாய்க்கும்? இறைவனின் சவாலை அவருடைய படையினர் என்ற முறையில் சாத்தானின் சேவகர்களுக்கு அறிவிக்கிறோம்.

'நாம் நம்முடைய சேவகருக்கு வெளிப்படுத்தியவற்றில் உங்களுக்கு ஏதேனும் சந்தேகம் இருக்குமானால், இவற்றைப் போன்ற ஒரு அத்தியாயத்தைக் கொண்டு வாருங்கள். நீங்கள் உண்மையாளர்களாக இருந்தால், இறைவனுக்கெதிரான உங்கள் சாட்சிகளை அழைத்துக் கொள்ளுங்கள். உங்களால் அதைச் செய்ய முடியாவிட்டால், நீங்கள் ஒரு போதும் இதைச் செய்ய முடியாது. பின்னர் மனிதர்களையும், கற்களையும் எரிபொருளாகக் கொண்ட நரக நெருப்பை அஞ்சிக் கொள்ளுங்கள். அது நம்ப மறுப்பவர்களுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறது. (2:23-24)

*************

ஆ-ர்

**எது கிடைத்த போதிலும்?**

கூறுவீர்களாக, மாஷா அல்லாஹ் லா குவ்வத்த இல்லா பில்லாஹ்' இது என் இறைவன் கொடுத்தது அவரையன்றி வேறொருவருக்கும் சக்தி இல்லை என்று . 18:39


## ஜகாத் - தூய்மை செய்தல்

சமீபத்தில் உலகம் முழுமைக்குமான 'தண்ணீர் நாள்' கோலாகலமாக ஹேகில் கொண்டாடப்பட்டது. அந்த விழாவில் 'வேல்ட் வாட்டர் பாரம்' கீழ்கண்டவாறு புள்ளி விவரங்களை முன் வைத்தது. சராசரி மனிதனின் உடம்பு 75% நீரால் ஆனது. மூளையில் கூட 85% திரவமாக உள்ளது 10% நீர் பற்களில் இருக்கிறதாம். மனித உடலின் ஆரோக்கியத்திற்கு தினமும் ஒரு குறிப்பிட்ட அளவு நீர் தேவைப்படுகிறது. உலகத்தில் 71% அளவு, நீரால் சூழப்பட்டுள்ளது. ஆனால் அதில் 97.5% அளவு நீர் உப்பு நீரே. அதாவது கடலே!

## செல்வத்தில் 2.5% நீரில் 2.5%

மீதி 2.5% அளவுள்ள நீரே சுத்தமான நீராகும். இந்த குறைந்தளவு சுத்தமான நீரிலும் 70%. நீரானது துருவப்பகுதிகளில் உறை பனிப்பாறைகளாக காணப்படுகிறது.மீதியுள்ள 30% நீரானது மண்ணுக்கடியில் மறைந்து கிடக்கிறது. இறுதியில் 1%க்கும் குறைவான நீரே ஒட்டுமொத்த மனித சமூகத்திற்கு வந்து சேருகிறது. உலகத்தில் உள்ள 6 பில்லியன் மக்கள் தொகையில் 1 பில்லியன் மக்கள், குளியலறை, கழிவறை இல்லாமல் சுகாதார கேடுகளுடனும் வாழ்ந்து வருகிறார்களாம் ! 21ம் நூற்றாண்டின் தொடக்கநிலையே இப்படியென்றால், இதன் முடிவு?.

நன்றி பாக்யா செப்டம்பர் 8-14; இதழ்



# நாய்கள் : பாரம்பரிய இஸ்லாத்தைத் தாண்டி!

ஏன் நாய்கள் முஸ்லிம் உலகில் வெறுப்புடன் இழிவாகப் பார்க்கப் படுகின்றன? ஏன் நாய்களை உங்கள் வீட்டில் வைத்துக் கொள்வதை பாரம்பர்ய இஸ்லாமியச் செய்திகள் கடினமாக் கிவிட்டன.

ஏன் ஒரு முஸ்லிம் டாக்ஸி ஓட்டுநர் ஒரு குருடரையும் அவருக்கு வழி காட்டும் நாயையும் தன் வாகனத்தில் ஏற்றிக்கொள்ள மறுக்க வேண்டும்? நாய்கள் கடவுளுடைய அற்புதமான ஒரு படைப்பு ஆகும். நாய்கள் மனிதர்களுடன் கலந்து வாழ்கின்றன. அவர்களைப் பாதுகாக்கின்றன; அவர்களுக்குச் சேவகமும் செய்கின்றன; இது மனிதன் பூமியில் இறைவனால் அமர்த்தப்பட்ட நாளில் இருந்து நடந்து வரும் ஒரு உண்மை நிகழ்வு ஆகும். இறைவன் அவற்றை வளர்ப்பதையும் வைத்துக் கொள்வதையும் தடை செய்யாத போது முஹம்மதோ அல்லது வேறு யாரேனும் ஒரு தூதரோ நாய்களை வைத்துக் கொள்வதைத் தடை "செய்தார் என்று கூறுவதில் ஏதேனும் பொருள் இருக்கிறதா?



நாய்களை நம் வீட்டில் வளர்க்க இறைவன் தடை செய்யவில்லை என்பதை நாம் எப்படி அறிந்து கொள்வது? நாம் குர்ஆனை இறைவனின் வார்த்தைகளைப் பார்க்க வேண்டும்.

நாம் குகைவாசிகளைப் பற்றிய சரித்திரத்தை 18ம் அத்தியாத்தில் படிக்கும் போது நாய்கள் மனிதர்களுடன் இருப்பதை இறைவன் அங்கீகரிக்கிறார் என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது. மேலும் அவை மனிதர்களின் வாழ்க்கையில் ஒரு பங்காற்றுவதையும் இறைவன் அங்கீகரிக்கிறார் 18:18ல் இறைவன் கூறுகிறார்.

உண்மையில் அவர்கள் தூங்கிக் கொண்டிருந்தபோதும், அவர்கள் விழித்துக் கொண்டிருப்பதாகவே நீர் எண்ணுவீர். நாம் அவர்களை வலப்புறமும் இடப்புறமும் புரட்டிக் கொண்டிருந்தோம். அவர்களுடைய நாய் அவர்கள் மத்தியில் கால்களை விரித்தவாறு இருந்தது.

நாய்கள் இருக்கும் இடத்தில் மலக்குகள் நுழைய மாட்டார்கள் என்று ஹதீஸ்கள் கூறுகின்றன. அதாவது குகைவாசிகள் அங்கிருந்த 309 வருடங்களும் மலக்குகள் அங்கே நுழைய வில்லையோ? மலக்குகள் நுழையாமல் அவர்கள் புரட்டப்பட்டது எப்படி?

மேலும் நம்பிக்கையாளர்களான அவர்கள் மத்தியில் நாய் இருப்பதை இறைவன் கண்டிக்காததிலிருந்து மேற்கண்ட ஹதீஸ் பொய்யானது, இட்டுக்கட்டப் பட்டது என்பது தெரியவில்லையா? குகைவாசிகளைப் பற்றிக் குறிப்பிடும்போது அவர்களுடைய நாயையும் சேர்த்து இறைவன் கூறுவதற்குக் காரணம், நம்பிக்கையாளர்கள் தங்கள் மத்தியில் நாய்களை வளர்ப்பதை இறைவன் தடைசெய்ய வில்லை என்பதைத் தெளிவுபடுத்துவதற்காக அன்றி வேறென்னவாக இருக்க முடியும்?

மேலும் 18:22ல் நம்பிக்கை யாளர்களுடன் சேர்த்து அவர்களுடைய நாயும் எண்ணப் படுகிறது.

"சிலர் கூறுவர், அவர்கள் மூவர், அவர்களுடைய நாய் நான்காவது, அதே சமயம் மற்ற சிலர் கூறுவர். ஐவர்,! அவர்களுடைய நாய் ஆறாவது, மற்ற சிலர் கூறினர், எழுவர், அவர்களுடைய நாய் எட்டாவது. கூறும். என் இரட்சகரே அவர்க ளுடைய எண்ணிக்கையை நன்கறிவார். சிலர் மட்டுமே அவர்களுடைய சரியான எண்ணிக்கையை அறிவர். எனவே அவர்களுடன் நீர் தர்க்கிக்க வேண்டாம். அவர்களை நீர் விட்டு விடும். இதைப் பற்றி நீர் யாரிடமும் ஆலோசிக்கவும் வேண்டாம். 18 : 22

மானிடர்களுக்கு மிகச் சிறந்த

தோழர்களாகவும், உதவியாளர் களாகவும் இருப்பதற்கேற்ற தன்மைகளை இறைவன் நாய்களுக்கு அளித்துள்ளார் நாய்கள், மனிதர்கள் மத்தியில் இருப்பதை விரும்பக் கூடியதாகவும், அவர்களை மகிழ்ச்சிப்படுத்தவும் விரும்புவதால், அவற்றைக் குறிப்பிட்ட காரியங்களை, இன்னும் ஏராளமான அற்புதமான பணிகளைச் செய்வதற்கு பழக்குவதற்கு எளிதானதாக இருக் கின்றது. நாய்கள் பறபல வடிவங் களிலும் அளவுகளிலும். பிறக்கின்றள.

5" உயரம் 6 பவுண்ட் எடை கொண்ட 'கிஹீவாஹீவா' வகை நாய்கள் முதல் 200 பவுண்ட் எடையுள்ள 'மாஸ்டிஃப்' மற்றும் 'செயின்ட் பெர்னார்ட்' வகை நாய்கள் வரை நாய்களில் ஏராளமான வகைகள் உள்ளன.

தூக்கிக்கொண்டு செல்லக் கூடிய அளவுக்கும் மடியில் வைத்துக் கொள்ளக் கூடிய அளவுக்கும் உள்ள மிகச் சிறிய நாய்கள் மானிடர்க்குத் தோழனாக இருப்பதற்கென்றே ஆனவை. ஒரு நாயிடம் அன்பு காட்டுவது ரத்த அழுத்தத்தைக் குறைக்க உதவுகிறது என்று மருத்துவ ஆராய்ச்சிகள் நிரூபிக்கின்றன. எனவே நாய்களின் எளிமையான தோழமை இறைவன் மானிட சமூகத்திற்களித்த ஒரு பரிசு ஆகும்.

இதற்கும் அதிகமாக நாய்கள் வெவ்வேறு வகையான வேலைகளைச் செய்யக் கூடிய திறன் பெற்றவையாக உள்ளன. ஆடு மாடுகளை மேய்ப்பதற்கும் அவற்றின் பட்டிகளை பாதுகாப்பதற்கும் நாய்கள் பயன் படுத்தப்படுகின்றன. சில நாய்கள் பாதுகாவல் பணியைச் செய்வதில் இயற்கையான ஆர்வம் உள்ளவையாக இருக்கின்றன. காவல் துறையினரும், இராணுவத்தினரும் 'ஜெர்மன் ஷெப்பர்ட், டாபர்மேன், ராட்வீலர்' வகை நாய்களைப் உபயோகப்படுத்துவதன் மூலம் நாய்களின் இயற்கையான அந்த ஆர்வத்தைப் பயன்படுத்திக் கொள்கின்றனர்.

நாய்கள் தேடுவதிலும் பின் தொடர்வதிலும் மிகவும் அற்புதமானவை. நீண்ட காலத்திற்கு முன் ஸ்விட்சர்லாந்தைச்சேர்ந்த ஒரு செயின்ட் பெர்னார்ட் நாய் பனியில் புதைந்து விட்ட தன் எஜமானனைக் கண்டு பிடித்து அவருக்கு உஷ்ணம் கொடுக்க அவர் அருகிலேயே இருந்து அவரைப் பிழைக்க வைத்து தான் இறந்து போனது முதல், நவீன காலத்தில் நில அதிர்ச்சியின்

இடுபாடுகளில் சிக்கியவர்களை மீட்பதில் உதவுவது வரை, நாய்கள் - நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக மனிதர்கட்குப் பேருதவி செய்து வருகின்றன. வேட்டையாடுவதற்கு நாய்கள் எப்போதும் பயன்படுத்தப் படுகின்றன. குர்ஆன் வசனம் 5:4 இதை உறுதி செய்கிறது.

“தங்களுக்கு ஆகுமானவை (ஹலால்) எவை என்று அவர்கள் கேட்கிறார்கள். கூறும் எல்லா நல்லவையும் உங்களுக்கு ஆகுமானவையே, பழக்கப் படுத்தப்பட்ட நாய்களும், பறவைகளும் உங்களுக்குப் பிடித்துக் கொண்டு வருபவை உட்பட. இறைவன் உங்களுக்குக் கற்றுக் கொடுத்தபடி நீங்கள் அவற்றைப் பழக்குங்கள். அவை பிடித்துக் கொண்டு வருபவற்றை நீங்கள் உண்ணலாம். மேலும் அவற்றின் மேல் இறைவனின் பெயரைக் கூறுங்கள். இறைவனை அஞ்சிக் கொள்ளுங்கள். இறைவன் கணக்கிடுவதில் மிகத் திறமையானவர். (5:4)

இருப்பினும் ஹதீஸ்களின் அடிப்படையில் நாய் தொட்டவற்றை ஆறு முறை நீரினாலும், ஏழாவது முறை மண்ணினாலும் கழுவ வேண்டும். இது, நாய்கள் பிடித்துக் கொண்டு வருபவற்றை நீங்கள் உண்ணலாம் என்ற குர்ஆன் கூற்றுடன் பொருந்தவில்லை. ஒரு ரீட்ர்வர் நாய் மகிழ்ச்சியுடன் கொண்டு வரும் ஒரு அழகிய பறவையை ஆறுமுறை நீரினாலும் ஏழாவது முறை மண்ணினாலும் கழுவி விட்டால் பின்னர் என்ன ருசி அதில் மிச்சமிருக்கும்?

சமீப காலங்களில், மற்ற அனைத்தையும் விட நாய்களின் தோழமையை, அன்பை மனிதர்கள் அதிகம் சார்ந்திருப்பது நடந்து வருகிறது. இதன் விளைவாக ஊனமுற்றோருக்குக்கண்களாகவும், காதுகளாகவும், கால்களாகவும், கைகளாகவும் மாறி வருகின்றன.

ஒரு பரபரப்பான தெருவிலோ, கூட்டம் மிகுந்த சந்தையிலோ ஒரு குருடருக்கு அவருடைய நாய் கண்ணாக இருந்து அவரை வழி நடத்திச் செல்லும் காட்சி நெகிழச் செய்வதும், உள்ளுணர்வைத் தூண்டுவதுமாகும். அந்த மனிதருக்கு அவருடைய நாய் இல்லாவிட்டால் அந்த சுதந்திரமும் மகிழ்ச்சியும் கிடைக்காது.

ஒரு செவிடருக்கு, அவர் ஆணாக இருந்தாலும், பெண்ணாக இருந்தாலும் தனிமையில் அச்சமில்லாமல் இருப்பதற்கு அவருடைய நாய் துணைபுரிகிறது. அழைப்பு மணி அடித்தாலோ, தொலைபேசி, அலாரம், நெருப்பு எச்சரிக்கை மணி ஆகியவற்றின் சப்தம் கேட்டாலோ

தொடர்ச்சி 27ம் பக்கம்

وَاتَّقُوْا يَوْمًا لَّا تَجْزِىْ نَفْسٌ عَنْ نَّفْسٍ شَيْـًٔا وَّلَا يُقْبَلُ مِنْهَا عَدْلٌ وَّلَا تَنْفَعُهَا شَفَاعَةٌ وَّلَا هُمْ يُنْصَرُوْنَ

123. Beware of the day when no soul will help another soul, no ransom will be accepted, no intercession will be useful, and no one will be helped.

123. எந்த ஆத்மாவும் மற்றோர் ஆத்மாவிற்கு உதவி செய்திடாத, எந்த ஈடும் ஏற்றுக் கொள்ளப்படாத, எந்தப் பரிந்துரையும் பயன்தராத, மேலும் எவர் ஒருவரும் உதவி செய்யப்படாத, அந்நாள் குறித்து எச்சரிக்கையுடன் இருந்து கொள்ளுங்கள்.

*Abraham*

**இப்றாஹீம்**

وَاِذِ ابْتَلٰٓى اِبْرٰهٖمَ رَبُّهٗ بِكَلِمٰتٍ فَاَتَمَّهُنَّ ‌ؕ قَالَ اِنِّىْ جَاعِلُكَ لِلنَّاسِ اِمَامًا ‌ؕ قَالَ وَمِنْ ذُرِّيَّتِىْ ‌ؕ قَالَ لَا يَنَالُ عَهْدِى الظّٰلِمِيْنَ

124. Recall that Abraham was put to the test by his Lord, through certain commands, and he fulfilled them. (God) said, "I am appointing you an imam for the people. " He said, "And also my descendants?" He said, "My covenant does not include the transgressors."

124. குறிப்பிட்ட கட்டளைகளின் மூலம் ஆப்ரஹாம் அவருடைய இரட்சகரால் சோதனையில் ஆழ்த்தப்பட்டதையும், மேலும் அவற்றை அவர் நிறைவேற்றியதையும் நினைவு கூர்ந்திடுங்கள், (கடவுள்) கூறினார், மனிதர்களுக்கு ஓர் இமாமாக உம்மை நான் நியமிக்கின்றேன். அவர் கூறினார், அத்துடன் என் சந்ததியினரையுமா ? அவர் கூறினார், என்னுடைய உடன்படிக்கை வரம்புமீறுபவர்களை உட்படுத்தியதாக இல்லை.

وَاِذْ جَعَلْنَا الْبَيْتَ مَثَابَةً لِّلنَّاسِ وَاَمْنًا وَاتَّخِذُوْا مِنْ مَّقَامِ اِبْرٰهٖمَ مُصَلًّى وَعَهِدْنَآ اِلٰٓى اِبْرٰهٖمَ وَاِسْمٰعِيْلَ اَنْ طَهِّرَا بَيْتِىَ لِلطَّآئِفِيْنَ وَالْعٰكِفِيْنَ وَالرُّكَّعِ السُّجُوْدِ

125. We have rendered the shrine (the Ka`aba) a focal point for the people, and a safe sanctuary. You may use Abraham's shrine as a prayer house. We commissioned Abraham and Ismail: "You shall purify My house for those who visit, those who live there, and those who bow and prostrate."

125.நாம் மக்களுக்கு அந்த ஆலயத்தை (கஅபா) ஒரு குவிமையமாகவும், பாதுகாப்பானதொரு புகலிடமாகவும் ஆக்கியுள்ளோம். ஆப்ரஹாமின் ஆலயத்தை நீங்கள் ஒரு பிரார்த்தனைமையமாக பயன்படுத்திக் கொள்ளலாம். ஆப்ரஹாம் மற்றும் இஸ்மாயிலுக்கு நாம் பொறுப்பை அளித்தோம்: தரிசிக்க வருபவர்களுக்கும், அங்கே வசிப்பவர்களுக்கும், அத்துடன் குனிந்து மேலும் சிரம் பணிபவர்களுக்காகவும் என் வீட்டை நீங்கள் தூய்மை செய்திட வேண்டும்.

وَاِذْ قَالَ اِبْرٰهٖمُ رَبِّ اجْعَلْ هٰذَا بَلَدًا اٰمِنًا وَّارْزُقْ اَهْلَهٗ مِنَ الثَّمَرٰتِ مَنْ اٰمَنَ مِنْهُمْ بِاللّٰهِ وَالْيَوْمِ الْاٰخِرِ قَالَ وَمَنْ كَفَرَ فَاُمَتِّعُهٗ قَلِيْلًا ثُمَّ اَضْطَرُّهٗۤ اِلٰى عَذَابِ النَّارِ وَبِئْسَ الْمَصِيْرُ

126. Abraham prayed: "My Lord, make this a peaceful land, and provide its people with fruits. Provide for those who believe in God and the Last Day." (God) said, "I will also provide for those who disbelieve. I will let them enjoy, temporarily, then commit them to the retribution of Hell, and a miserable destiny."

126.ஆப்ரஹாம் பிரார்த்தித்தார்: என் இரட்சகரே இதனை ஓர் அமைதி நிறைந்த தலமாக ஆக்குவீராக, மேலும் இதன் மக்களுக்குக் கனிகளை வழங்குவீராக.கடவுள் மற்றும் இறுதி நாளின் மீது நம்பிக்கை கொள்வோருக்கு வழங்குவீராக. (கடவுள்) கூறினார், நம்ப மறுக்கின்றவர்களுக்கும் கூட நான் வழங்குவேன். அவர்களை நான் தற்காலிகமாகச் சுகமனுபவிக்க அனுமதிப்பேன், பின்னர் நரகத்தின் தண்டனைக்கும், துக்ககரமானதொரு விதிக்கும் அவர்களை உட்படுத்துவேன்.

*Abraham Delivered All the Practices of Submission (Islam)*

**அர்ப்பணித்தலின் (இஸ்லாம்) எல்லா வழிபாட்டு முறைகளையும் இப்றாஹீம் சேர்ப்பித்தார்.**

وَاِذْ يَرْفَعُ اِبْرٰهِمُ الْقَوَاعِدَ مِنَ الْبَيْتِ وَاِسْمٰعِيْلُ
رَبَّنَا تَقَبَّلْ مِنَّا  اِنَّكَ اَنْتَ السَّمِيْعُ الْعَلِيْمُ

127. As Abraham raised the foundations of the shrine, together with Ismail (they prayed): "Our Lord, accept this from us. You are the Hearer, the Omniscient.

127. ஆலயத்தின் அஸ்திவாரங்களை ஆப்ரஹாம் உயர்த்திய போது, இஸ்மாயீலுடன் சேர்ந்து(அவர்கள் பிரார்த்தித்தனர்): எங்கள் இரட்சகரே, இதனை எங்களிடமிருந்து ஏற்றுக் கொள்வீராக. நீரே செவியேற்பவர், எல்லாம் அறிந்தவர்.

رَبَّنَا وَاجْعَلْنَا مُسْلِمَيْنِ لَكَ وَ مِنْ
ذُرِّيَّتِنَآ اُمَّةً مُّسْلِمَةً لَّكَ وَاَرِنَا مَنَاسِكَنَا وَتُبْ عَلَيْنَا
اِنَّكَ اَنْتَ التَّوَّابُ الرَّحِيْمُ

128. "Our Lord, make us submitters to You, and from our descendants let there be a community of submitters to You. Teach us the rites of our religion, and redeem us. You are the Redeemer, Most Merciful.

128. எங்கள் இரட்சகரே, உமக்குச் சரணடைந்தவர்களாக எங்களை ஆக்குவீராக, மேலும் எங்களுடைய சந்ததியினரிலிருந்து உமக்குச் சரணடைந்தவர்களாக ஒரு சமூகத்தை இருக்கச் செய்வீராக.எங்களுடைய மார்க்கத்தின் சடங்குகளை எங்களுக்குக் கற்றுத்தருவீராக, மேலும் எங்களை மீட்பீராக.நீரே மீட்பவர், மிக்க கருணையாளர்.

رَبَّنَا وَابْعَثْ فِيْهِمْ رَسُوْلًا مِّنْهُمْ يَتْلُوْا عَلَيْهِمْ اٰيٰتِكَ وَيُعَلِّمُهُمُ الْكِتٰبَ وَالْحِكْمَةَ وَ يُزَكِّيْهِمْ اِنَّكَ اَنْتَ الْعَزِيْزُ الْحَكِيْمُ

129. "Our Lord, and raise among them a messenger to recite to them Your revelations, teach them the scripture and wisdom, and purify them. You are the Almighty, Most Wise."

129. எங்கள் இரட்சகரே, மேலும் அவர்களுக்கு உம் வெளிப்பாடுகளை ஓதிக்காட்டவும், அவர்களுக்கு வேதத்தையும் ஞானத்தையும் கற்றுத்தரவும், மேலும் அவர்களைத் தூய்மைப்படுத்தவும், அவர்களில் இருந்தே ஒரு தூதரை எழுப்புவீராக.நீரே எல்லாம் வல்லவர், ஞானம் மிகுந்தவர்.

وَمَنْ يَّرْغَبُ عَنْ مِّلَّةِ اِبْرٰهٖمَ اِلَّا مَنْ سَفِهَ نَفْسَهٗ وَلَقَدِ اصْطَفَيْنٰهُ فِى الدُّنْيَا وَاِنَّهٗ فِى الْاٰخِرَةِ لَمِنَ الصّٰلِحِيْنَ

130. Who would forsake the religion of Abraham, except one who fools his own soul? We have chosen him in this world, and in the Hereafter he will be with the righteous.

130. தன்னுடைய சொந்த ஆத்மாவையே ஏய்த்துக் கொள்கின்ற ஒருவனைத் தவிர, ஆப்ரஹாமின் மார்க்கத்தை யார் புறக்கணிப்பார்? இந்த வாழ்வில் அவரை நாம் தேர்ந்தெடுத்தோம், மேலும் மறுவுலகிலோ அவர் நன்னெறியாளர்களுடன் இருப்பார்.

22 பக்கம் தொடர்ச்சி
தன் எஜமானரை எச்சரிக்கும்படி நாய்களைப் பழக்க முடியும். தங்களுடைய நாய் எச்சரித்தால் ஒரு செவிட்டுத் தம்பதியினர் தங்களுடைய அழுகின்ற குழந்தையைக் கவனிக்க முடியும். ஒரு நாய் அவர்களுடன், அவர்களுக்காகக் கேட்பதற்கு இருந்தால் உலகம் அவர்களுக்கு அச்சம் தரத்தக்கதாக இருக்காது. அவர்களுடைய தனிமை உணர்வும் நீங்கும்.

சக்கர நாற்காலியில் அமர்ந்திருப்பதாலோ, அல்லது மூட்டு வலியின் காரணமாகவோ, குனியவும், நிமிரவும் முடியாமல் சிரமப் படுவோருக்கு ஒரு நாய் ஏராளமான உதவிகளைச் செய்யவும், ஆறுதலைத் தரவும் முடியும். ஒரு நாய் கீழே உள்ள பொருளை எடுப்பது நமக்குச் சாதாரணமான ஒன்றாக இருக்கலாம். ஆனால் ஒரு ஊனமுற்ற மனிதர் மற்றவர்களை அடிக்கடி உதவி கேட்கும் சிரமத்திலிருந்து அது காக்கக் கூடும்.

சேவகம் புரியக்கூடிய ஒரு நாய் அருகிலிருந்தால் அந்த ஊனமுற்றவர் சுதந்திரமும், சுய மதிப்பும் பெறுகிறார். பேனாவையோ, சாவிகளையோ, மாத்திரைக் குப்பிகளையோ, அவை கட்டிலுக்குக் கீழே உருண்டு கிடந்தாலும் சரி, அவற்றை எடுத்துத் தன் எஜமானரிடம் தருவதில் ஒரு நாய் மகிழ்ச்சி அடைகிறது.

சரித்திரங்கள் முழுவதும், நாய்களின் நற்பண்புகள் - நன்றி உணர்வு, நம்பகத்தன்மை, பொறுமை, ஆகியவை - அங்கீகரிக்கப்பட்டு வந்துள்ளன. புகழ் பெற்ற அறிஞர் மார்க் ட்வைன் கூறினார் "பசியுடனிருக்கும் ஒரு நாயை எடுத்து அதற்கு உணவளித்து. அதற்கு வசதிகள் செய்து கொடுத்தால் அது உன்னைக் கடிக்காது. இதுவே ஒரு நாய்க்கும், மனிதனுக்கும் உள்ள அடிப்படை வித்தியாசம் ஆகும்' லார்ட் பைரன் தன் நாய்க்குப் பாடிய இரங்கற்பாவில் கூறுகிறார் "(அதனிடம்) ஏமாற்றம் தராத அழகு இருந்தது. திமிர் இல்லாத பலம் இருந்தது, கோபம் இல்லாத வீரம் இருந்தது", ஒரு மனிதனின் தீயகுணங்கள் இல்லாமல் அவனுடைய நல்ல குணங்கள் அனைத்தும் அதனிடம் இருந்தது".

மேலும், இவை அனைத்திற்கு மேலாக, நாய்கள் பூமியிலும், வானத்திலும் . உள்ள மற்ற படைப்புக்களைப் போல் முற்றிலும் இறைவனுக்கு அடிபணிந்தவையாக இருக்கின்றன. அவர் கட்டளைப்படி சற்றும் பிசகாமல் மனிதர்கட்குச் சேவகம் புரிகின்றன.

"வானம், பூமி ஆகியவற்றில் உள்ள அனைத்தும் விரும்பியோ, விரும்பாமலோ 'அவருக்கு அடிபணிந்து இருக்கும் நிலையில் மேலும் அவரிடமே அவை திரும்பிச் "செல்ல இருக்கும்போது அவர்கள் இறைவனின் மார்க்கத்தை விட்டு வேறு மார்க்கத்தைத் தெடுகிறார்களா? 3:83.

# கேள்வி ? பதில் !

**கேள்வி** : குர்ஆனில் இறைவன் தன்னைப் பற்றிக் குறிப்பிடும்போது நாம் என்று - குறிப்பிட்டால், அச்செயலில் மலக்குகளைப் போன்ற மற்றவர்களும் பங்கு பெறுகிறார்கள் என்று ரஷாத் கலீஃபா தனது மொழிபெயர்ப்பின் (பின் இணைப்பில் ஆ.ர்.) கூறி உள்ளார். ஆனால் குர்ஆ னில் 2:34 ல் மலக்குகளை நோக்கி நாம் கட்டளையிட்டோம் என்று அல்லாஹ் கூறுகிறார். மேலும் 21:73ல் “நம்மை வணங்குபவர்களாக இருந்தார்கள்” என்றும் அல்லாஹ் கூறுகிறார். முரண்படுவது போல் தோன்றுகிறதே, விளக்கம் தரவும்.

**அன்வர் - குனியமுத்தூர்.**

**பதில்** : ரஷாத் தனது குர்ஆன் மொழிபெயர்ப்பின் அனுபந்தம் 10ல் **(appendix 10)** எல்லாம் வல்லவரால் எப்போதெல்லாம் முதன்மைப் பன்மைச் சொல் **(First Person Plural)** அதாவது 'நாம்' என்ற சொல் பயன்படுத்தப்படுகிறதோ அப்போதெல்லாம் ஒரே சீராக வானவர்களைப் போன்ற மற்றவர்களும் பங்கு பெறுகிறார்கள் என்பதை அது குறிக்கிறது என்று எழுதியுள்ளார். மேலும் இறைவனுக்குரிய வழிபாட்டைப் பற்றிக் கூறப்படும் போதெல்லாம் முதன்மை ஒருமைச் சொல்லே **(Sigular Tense)** பயன் படுத்தப்படுகிறது என்றும் எழுதியுள்ளார்.

நீங்கள் குறிப்பிட்டிருக்கும் குர்ஆன் வசனங்களான 2.34 மற்றும் 21:73 ஆகியவை இத்தகவலைத் தவறானதென்றும். குர்ஆனுக்கு முரணானது என்றும் தெளிவாகப் பிரித்தறிவித்துக் காட்டுகிறது.

இதைத் தவறு என்று ஒப்புக் கொள்வதில் நமக்கு எந்தத் தயக்கமும் இருக்கத் தேவையில்லை. ஏனெனில் குர்ஆன் தூதர்களும் நம்மைப் போன்ற மனிதர்களே என்ற கூறுகிறது.

மனிதர்கள் என்ற முறையில் தூதர்கள் சொல்வதெல்லாம் இறைவனின் வாக்கு ஆகாது. தூதர்கள் கூறினாலும் அதற்கு வேத ஆதாரம் வேண்டும். அது சரியானதாகவும் இருக்க வேண்டும். அப்போதுதான் அவை ஏற்றுக் கொள்ளப்படும். ஏனெனில்

தூதர்களுக்குக் கட்டுப்படுவது என்பது அவர்கள் சரியானவற்றை, நன்மையானவற்றைக் கூறும்போது மட்டுமே. (60:12)

மேலும் ரஷாத் தன்னை ஒருபோதும் தவறே செய்யாதவர் என்று கூறிக் கொண்டதில்லை. அவருடைய மொழிபெயர்ப்பின் அனுபந்தத்தில் உள்ளவை அவருடைய அடிக்குறிப்புக்கள், உப தலைப்புக்கள் ஆகியவை இறைவனிடமிருந்து வெளிப் பட்டவை என்றும் கூறவில்லை. அவர் குர்ஆனை மட்டுமே பின்பற்றும்படியே மனித சமூகத்திற்குப் பிரசாரம் செய்தார்.

முஹம்மதுக்கு அருளப்பட்ட அரபி மொழியில் உள்ள, அற்புதக் கணிதக் கட்டமைப்புக் கொண்ட, 114 அத்தியாயங்களும், 6346 வசனங்களும் கொண்ட அந்தக் குர்ஆனை மட்டுமே பின்பற்றும் படி அவர் கூறினார். அந்தக் குர்ஆன் ரஷாதின் தவறுகளை சுட்டிக்காட்டும் போது அத்தவறுகளை ஒதுக்கிவிட்டு நாம் குர்ஆனை மட்டுமே பின்பற்ற வேண்டும். சரியானதை நிறைய கூறுகிறார் என்பதற்காக ஒரு மனிதர் கூறியதெல்லாம் சரியானதே என்று ஆகிவிடாது. அதுபோல் தவறான ஒன்றைக் கூறிவிட்டால் அவர் கூறியது அனைத்தும் தவறானதாகி விடாது. நடுநிலையுடன் இருக்கும்படிக் குர்ஆன். நமக்கு கூறுகிறது.

மேலும் கூறுபவர் யாரானாலும் சரி (தூதர்களானாலும், மகான் களானாலும்) அவர் என்ன கூறுகிறார் என்பதை நன்கு செவியேற்று அதில் சிறந்ததை எடுத்துச் செயல் படுவதே நேர்வழி என்றும் அறிவுடைமை என்றும் குர்ஆன் கூறுகிறது. உண்மை எது பொய் எது, நன்மை எது. தீமை எது, நேர்வழி எது வழிகேடு எது சரியானது எது, தவறானது எது என்பதைப் பிரித்தறிவிக்கவே சரியான குர்ஆன் பாதுகாக்கப்பட்டு உள்ளது.

**கேள்வி** : தூதர்களுக்கு வேதம் வராது என்று எழுதி இருந்தீர்கள். 57:25ல் தூதர்களுக்கு வேதம் கொடுத்ததாக அல்லாஹ் கூறுகிறார். விளக்கம் தரவும்.

**அன்வர்தீன் - குனியமுத்தூர்**

**பதில்** : குர்ஆனை நாம் அணுகும்போது அதனை முழு மையாக அணுகவேண்டும். ஒரு வசனத்தை மட்டும் வைத்துக் கொண்டு ஒரு விஷயத்தைப் பற்றிய முடிவுக்கு

வந்து விடக் கூடாது. ஒரு விஷயத்தைப் பற்றி குர்ஆன் என்ன கூறுகிறது என்று அறிந்து கொள்ள விரும்பினால் அது சம்பந்தமான அனைத்து வசனங்களையும் படித்து, விளங்கிக் கொள்ள வேண்டும். அதன் பின்னரே அந்த விஷயம் குறித்துக் குர்ஆன் கூறுவதை முடிவு செய்ய வேண்டும்.

இந்த அணுகுமுறையுடன், நாம் நீங்கள் கூறும் விஷயத்தைப் பற்றிக் குர்ஆனின் கூற்றைக் காண்போம். 2:213ல் நபிமார்களுடன் வேதத்தை அனுப்பியதாக இறைவன் கூறுகிறார். மேலும் 3:81ல் 'உங்களிடம் இருப்பதை மெய்ப்பிக்கும் தூதர் வந்தால்' என்று இருப்பதிலிருந்து தூதர்கள் ஏற்கனவே இருக்கும் வேதத்தை மெய்ப்பிப் பவர்களாக இருப்பார்கள் என்றும் அறிந்து கொள்கிறோம்.


மேலும் இறைவனிடமிருந்து வேதம் பெற்ற நபிமார்கள் அந்த வேதத்தை மக்களிடம் சேர்ப்பிக்க வேண்டியவர்கள் ஆகிறார்கள். எனவே அவர்கள் தூதர்களாகவும் ஆகிறார்கள்.

முஹம்மத் இறைவனிடமிருந்து குர்ஆனைப் பெற்றதால் அவர் நபி ஆகிறார். மேலும் அதை மக்களிடம் சேர்ப்பிப்பதால், முன்னர் உள்ள வேதமான இன்ஜீலை **(Bible)** மெய்ப்பிப்பதாலும் அவர் தூதராகவும் ஆகிறார். இறைவன் 33:40;ல முஹம்மதை நபி என்றும் (ரசூல்) தூதர் என்றும் குறிப்பிடுவதிலிருந்து இரண்டும் வெவ்வேறு பணிகள் என்றும் நாம் அறிந்து கொள்கிறோம். நபிமார்கள் அனைவரும் தூதர்களே. ஆனால் தூதர்கள் அனைவரும் நபிமார்கள் அல்லர். ஒரு தூதருக்கு வேதம் கொடுக்கப்பட்டால் அவர் நபியாகவும் ஆகிவிடுகிறார். புதியவேதம் எதுவும் கொடுக்கப்படாமல் ஏற்கனவே உள்ள வேதத்தை மெய்ப்பிக்க மட்டும் செய்தால் அவர் தூதர் மட்டும் என்றாகிறார்.

எனவே முழுமையான குர்ஆனின் அடிப்படையில், 57:25ல் வேதம் கொடுக்கப்பட்ட தூதர்களைப் பற்றிக் கூறப்படுவதால் அது நபிமார்களான தூதர்களையே குறிக்கிறது என்றும் நாம் அறிந்து கொள்கிறோம்.

மேலும் தொடர்ந்து வரும் 57 : 26 வசனத்தையும் 29 : 27 வசனத்தையும் சிந்திக்கவும்.

# தீவிரவாதத்திற்கு குர்ஆன் கண்டனம்



நல்லதும் தீயதும் சமமாகாது. நல்ல பதிலும் தீய பதிலும் சமமாகாது, நீங்கள் இயன்ற வரையில் நல்ல பதிலையே அளிக்க வேண்டும், நன்மையைக் கொண்டு தீமையைத் தடுத்துக் கொள்ள வேண்டும். எனவே இவ்விதம் உங்கள் எதிரியாய் இருந்தவர்கூட உங்கள் நண்பராகி விடக் கூடும். (41 : 34)

இறைவன் மேல் நம்பிக்கை கொண்டோர் எத்தகையோரென்றால் அவர்கள் பெரும் பாவங்களையும், மானக்கேடானவற்றையும் விட்டு விலகிக் கொள்வார்கள். தாம் கோபம் கொண்டபோதும் மன்னித்து விடுவார்கள். (42:37)

அவர்கள் மேல் அநீதி இழைக்கப்பட்டால் தங்கள் உரிமைக்காகப் போராடுவார்கள் (42:39)

ஓர் அநீதிக்குப் பதில் அதைப்போன்ற தண்டனை ஒன்றே எனினும் எவர்கள் மன்னித்து நன்மையைக் கடைப்பிடிக்கிறாரோ அவர்கள் தங்கள் இரட்சகரிடம் அதற்குரிய நற்கூலியைக் கொடுக்கப்படுவார். அவர் அநியாயக்காரர்களை நேசிப்பதில்லை. (42:40)

நிச்சயமாக, எவர்கள் தங்களுக்கு அநீதி இழைக்கப்பட்ட தால் தங்கள் உரிமைக்குப் போராடுகிறார்களோ அவர்கள் எந்தக் குற்றமும் செய்யவில்லை . (42:41)

எவர் மக்களுக்கு அநியாயம் செய்து, நீதமின்றி பூமியில் வன்முறையைக் கைக்கொள்கிறாரோ அவர்களே குற்றவாளிகள். இத்தகை யோருக்கு வலி மிகுந்த தண்டனையுண்டு. (42:42)

பொறுமையையும், மன்னிப்பையும் மேற்கொள்வதே உறுதியான சிறந்த குணநலன்களைப் பிரதிபலிப்பதாக உள்ள து. (42:43)

உங்களுடைய மார்க்கத்தின் காரணமாக உங்களுடன் சண்டையிடா தவர்களுடன், உங்களை உங்கள் வீடுகளை விட்டு வெளியேற்றாதவர்களுடன் நீங்கள் நட்புறவு கொள்வதைக் கடவுள் தடுக்கவில்லை. நீங்கள் அவர்களுடன் நட்புறவு கொள்ளலாம். அவர்களுடன் நீதமாகவும் இருங்கள். நிச்சயமாக இறைவன் நீதிமான்களை நேசிக்கின்றார். (60 : 8)

உங்கள் மார்க்கத்தின் காரணமாக உங்களுடன் போரிட்டு, உங்கள் வீடுகளை விட்டு வெளியேற்றி உங்களை அழிப்பதற்காக மற்றவர்களுடன் சேர்ந்து கொள்பவர்களுடன் நீங்கள் நட்புக் கொள்வதையே கடவுள் தடுக்கிறார். நீங்கள் அவர்களிடம் நட்புக் கொள்ள வேண்டாம். அவர்களிடம் நட்புக் கொள்பவர்கள் வரம்பு மீறியவர்களே. (60 : 9)

தங்கள் பெற்றோர்களானாலும், பிள்ளைகளானாலும் உறவின ரானாலும், கோத்திரத் தாரானாலும் கடவுளையும், அவர் தூதரையும் எ தி ர் ப் பா ள ர் க ளா னா ல் அவர்களுடன் கடவுளையும் இறுதி நாளையும் நம்பிக்கை கொண்டவர்கள் நட்புறவு கொள்வதை நீர் காண முடியாது. இத்தகையோரின் இதயங்களில் அவர் நம்பிக்கையை விதித்திருக்கின்றார். மேலும் அவரிடமிருந்து வரும் உள்ளுணர்வால் அவர்களுக்கு ஆதரவளிக்கிறார். மேலும் ஆறுகள் ஓடிக்கொண்டிருக்கும் சுவனச் சோலைகளுக்குள் அவர்களை அனுமதிப்பார். கடவுள் அவர்களைத் திருப்தி கொண்டார். அவர்களும் அவரைத் திருப்தி கொண்டனர். இவர்களே கடவுளின் படையினர். நிச்சயமாக இறைவனின் படையினரே வெற்றி பெற்றவர்கள். (58:22)

உங்களைத் தாக்குவோருக்கு எதிராக நீங்கள் இறைவனின் பாதையில் சண்டையிடலாம். ஆனால் வரம்பு மீறாதீர்கள். நீச்சயமாகக் கடவுள் வரம்பு மீறுபவர்களை நேசிப்பதில்லை. (2:190)

உங்களுடன் போரிடுபவர்களை நீங்கள் கொல்லலாம். அவர்கள் உங்களை உங்கள் வீடுகளிலிருந்து வெளியேற்றினால் நீங்களும் அவர்களை அவர்கள் வீடுகளி லிருந்து வெளியேற்றலாம். அடக்கு முறை கொலையைவிட மோச மானது. புனிதப்பள்ளியில் அவர்கள்

உங்களைத் தாக்கினாலே அன்றி அவர்களுடன் சண்டையிடாதீர்கள் 2:191

அவர்கள் விலகிக் கொண்டால் கடவுள் மன்னிப்பவராகவும், அன்பு மிக்கவராகவும் இருக்கின்றார். 2:192

அடக்குமுறையைக் களையவும், கடவுளைச் சுதந்திரமாக வழிபடவும் அவர்களுடன் நீங்கள் சண்டையிடலாம். அவர்கள் விலகிக் கொண்டால் நீங்கள் வரம்பு மீறக்கூடாது. வன்முறை, அடக்குமுறை செய்வோருக்கு எதிராக மட்டுமே அடக்குமுறைக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. (2:193)

(போர்தடுக்கப்பட்ட புனித மாதங்களில் அவர்கள் உங்கள் மீது அடக்குமுறையைப் பிரயோகித்தால் அதே அளவு நீங்களும் செய்யுங்கள். அவர்கள் உங்களை தாக்கினால் அதற்கு ஈடான அளவு நீங்களும் அவர்களைத் தாக்குங்கள். கடவுளை அஞ்சிக் கொள்ளுங்கள்; மேலும் கடவுள் நல்லோருடன் இருக் கின்றார் என்பதை அறிந்து கொள்ளுங்கள். (2:194)

கடவுளுடைய (இறுதி) நாளை எதிர்பார்க்காதவர்களை மன்னித்து விட்டு விடும்படி நீர் நம்பிக்ளை கயாளர்களிடம் கூறும். அவர்கள் சம்பாதித்த வினைகளுக்குத் தகுந்த பலனை அவர் கொடுப்பார். (45:14)


வேதம் கொடுக்கப்பட்டோரே, உங்கள் மார்க்கத்தில் நீங்கள் வரம்பு மீறாதீர்கள். மேலும் கடவுளைப் பற்றி உண்மையைத் தவிர வேறு எதையும் கூறாதீர். (4:171)

நாம் உங்களை நடுநிலையான சமுதாயமாக ஆக்கினோம். (2:143)
உமது இரட்சகர் நாடியிருந்தால் பூமியில் உள்ள அனைவரும் மொத்தமாக நம்பிக்கை கொண்டிருப்பார்கள். மனிதர்கள் அனைவரும் நம்பிக்கையாளர்களாக வேண்டும் என்று நீர் நிர்பந்திக்க விரும்புகிறீரா? (10:99)

“மார்க்கத்தில் எந்தவித நிர்ப்பந்தமுமில்லை” (2:256)

"நீர் கூறும் (நம்ப மறுப்போரே) உங்கள் மார்க்கம் உங்களுக்கு, எங்கள் மார்க்கம் எங்களுக்கு.” (109:6)

“இது ஒரு நினைவூட்டலே ஆகும். எனவே எவர் நாடுகிறாரோ அவர் தன் இரட்சகரிடம் செல்லும் வழியைத் தேர்ந்து கொள்ளட்டும். (73:19)




# இஸ்லாமியத் தீவிரவாதம் ஒரு கண்ணோட்டம்

நவீன உலகை மிகவும் அச்சுறுத்திக் கொண்டு இருக்கும் பிரச்சினைகளில் முக்கியமான ஒன்று மதத் தீவரவாதமும் (Religious Ex-tremism) அதனால் விளையும் பயங்கரவாத நடவடிக்கைகளும் (Terrorist Acts) ஆகும்.

உலகில் இதுவரை போர்களால் ஏற்பட்ட உயிர் இழப்புகளை விட மதத் தீவிரவாதத்தின் விளைவான - பயங்கரவாத நடவடிக்கைகளால் ஏற்பட்ட உயிர் இழப்புக்களே அதிகம் என்ற புள்ளி விவரங்கள் கூறுகின்றன. இது யாராலும் மறுக்க முடியாத ஒரு கண்கூடான விஷயமாகவும் உள்ளது.

நாடுகளுக்கிடையே ஏற்படும் போர்கள் எப்போதாவது ஒருநேரத்தில், எங்காவது சில இடங்களில் மட்டுமே நிகழ்கின்றன. குறிப்பிட்ட காலத்திற்குப் பின் அவை முடிந்தும் விடுகின்றன. ஆனால் மதத் தீவிரவாத, பயங்கரவாத நடவடிக்கைகள். உலகமெங்கும் பல்வேறு இடங்களில், தொடர்ந்து நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன.

உலகின் அனைத்து மதங்களும், வழிபடும் முறைகளில் வேறுபட்டாலும் அடிப்படையில் ஒரே கடவுளைப் போதிக்கின்றன. அவர் திருப்தியை அடையும் வழிமுறைகளாக அன்பு, மனித நேயம், நாணயம், நேர்மை போன்ற நற்பண்புகளையே அவை அறிவிக்கின்றன.

எந்த மதமும் வரம்பு மீறலையும், வன்முறையையும், ஆதரிக்கக் கூடியதாக இல்லை. இறைத்தூதர்களும், மகான்களும் கூட வன்முறைக்கு வழிகாட்டியது இல்லை. மனிதர்களிடையே சமாதானமும், சமஉரிமையும் எல்லா மதங்களும் ஏற்றுக் கொண்ட ஒரு கொள்கை.

அனைத்து மதங்களும் சாந்தியைப் போதிப்பதாகவே அந்தந்த மதங்களைச் சேர்ந்தவர்கள், (தீவிரவாதிகள், பயங்கரவாதிகள் உட்பட) கூறுவார்கள். இவ்வாறு வன்முறையின் வாயில்களை அனைத்து மதங்களும் அடைத்தே வைத்திருக்கும் போது, எப்படி தீவிரவாதமும், பயங்கரவாதமும் மதங்களின் உள்ளே நுழைந்தன? அவை மதங்களின் பின்வாசல்கள் வழியே உள்ளே நுழைக்கப்பட்டன என்பதைத் தவிர இக்கேள்விக்கு பதில் வேறென்னவாக இருக்க முடியும்?

எல்லா முக்கிய மதங்களும் அடிப்படையில் ஓரிறைக் கொள்கைளையே போதிக்கின்றன. ஆயினும் அந்தந்த மதங்களைச் சேர்ந்தவர்கள். பெரும்பாலோர் தங்களுடைய இறைத்தூதர்களை, தங்கள் மதம் சார்ந்த மகான்களை இறைவனுக்கு வெவ்வேறு விதங்களில் இணையாக ஆக்குவதன் மூலம் ' தங்களுக்கிடையில் பிரிவுகளையும், பிளவுகளையும் உருவாக்கிக் கொள்கின்றனர்.

ம த ங் க ள னை த் தை யு ம் ஒன்றிணைக்கும் சக்தியாக எல்லா மதத்தவர்களையும் படைத்த ஒரே கடவுள் இருக்கும் போது, அவரி லிருந்து கவனத்தை நீக்கி இறைவனுக்கு இணையாக தாங்கள் கருதும் இறைத்தூதர்களையும் மகான்களையும் பிரார்த்தித்துக் கொண்டும், துதிபாடிக் கொண்டும், அனேகர் இருக்கின்றனர். இதன் காரணமாகவே ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொண்டும் இருக்கின்றனர்.

'நான் இணைவைப்பவர் இறைவனுக்கு நெருக்கமானவரா அல்லது நீ இணைவைப்பவரா?' நான் இணைவைப்பவர் கூறியது (அல்லது கூறியதாகக் கூறப்படுவது) சரியா, அல்லது நீ இணைவைப்பவர் கூறியதா?

இதுவே மதங்களின் வேறுபாடுகளுக்கும், அவற்றைப் பின்பற்றும் மனிதர்களின் வேறுபாடுகளுக்கும் முக்கிய காரணமாக உள்ளது. , இதன் காரணமாகவே அவர்கள் ஒருவர் மீது ஒருவர் வன்முறையையும் அடக்கு முறையையும் பிரயோகிக்கின்றனர்.

எனவே மதத்தீவிரவாத, பயங்கர வாதங்களுக்கு உண்மையில் அம்மதங்கள் காரணம் அல்ல. அதில் உள்ள மனிதர்கள்தான் என்று நாம் விளங்கிக் கொள்கின்றோம்.

இந்தத் தீவிரவாதிகளின் தலைவர்கள் உண்மையில் அவர்கள் சார்ந்திருக்கும் மதத்தின்

அடிப்படையான கடவுள் ஒன்றே என்ற கொள்கையில் பிடிப்புள்ளவர்களாக இருந்தால், அம்மதம் கூறும் நற்பண்புகளைக் கடைப்பிடித்தால் அவர்கள் தீவிரத்தைச் சரி கண்டிருக்க ' மாட்டார்கள். தங்கள் இலட்சியத்தை அடைய வன்முறையை வழியாய் தேர்ந்தெடுத்திருக்க மாட்டார்கள்.

ஆனால் அந்தத் தலைவர்களின் உண்மை நோக்கம் கடவுளின் திருப்தியை அடைவதோ, தங்கள் சமூகத்தினருக்காகப் பாடுபடுவதோ அல்ல.

நிகழும் ஒவ்வொரு நிகழ்ச்சி யையும் தங்களுக்கு எதிரானது என்று கூறி சிந்தனையில்லாத அப்பாவி ஜனங்களை வாக்கு வன்மையால் மயக்கிக் கூட்டம் சேர்த்து, பின்னர் அக்கூட்டத்தைக் கொண்டு சுயலாபமும், புகழும் அடைவதே இத்தலைவர்களின் நோக்கம் ஆகும். இதற்கு இன்று உலகில் உள்ள எந்த ஒரு தீவிரவாதத் தலைவரும் விதிவிலக்கல்ல.

வெவ்வேறு சமூகக் காரணங்க ளினால் பாதிக்கப்பட்ட அப்பாவி இளைஞர்களைப் பிடித்து மதம் என்ற பெயரிலும், இனம் என்ற பெயரிலும், ஜாதி என்ற பெயரிலும் மூளைச்சலவை செய்து கற்பனை உலகத்தில்

**'இறைவனின் பாதையில் அறப்போர் புரிவது, பாடுபடுவது' என்ற விரிந்த அர்த்தம், தரும் சொல்லை அவர்கள் 'ஆயுதமேந்திய போர்' என்பதற்கு மட்டும் பயன்படுத்தி 'ஜிஹாத்' என்ற வார்த்தையையே கெடுத்து வைத்திருக்கிறார்கள்.**

அவர்களை உலவ விட்டு, தீவிரவாதத்தை போதித்து, தங்கள் சுயலாபங்களுக்காக இத்தலை வர்கள் அவர்களை வன்முறையில் ஈடுபட வைக்கின்றனர்.

விபரம் தெரியாமல், விஷயம் புரியாமல் வன்முறையை வழிமுறையாய் : ஏற்றுக்கொண்டு, விபரம் தெரிந்த பின் அவற்றிலிருந்து மீள முடியாமல் சிக்கிக் கிடப்பவர்கள் அவர்களில் அதிகம் இருக்கக் கூடும். ஏனெனில் வன்முறை என்பது 'ஒரு வழிப்பாதையே' ஆகும்.

வெவ்வேறு இன, அரசியல் மற்றும் மதக் காரணங்களுக்காக வன்முறை நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றன என்றாலும் மதத்தின் பெயரால், கடவுளின் பெயரால் நடக்கும் வன்முறை நடவடிக்கைகளே அதிகம் ஆகும்.

அது போல் வெவ்வேறு மதங்களைச் சார்ந்தவர்களாலும் வன்முறை நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றன என்றாலும் முஸ்லிம் தீவிரவாதிகளின் வன்முறை நடவடிக்கைகளே அதிகம் ஆகும். உலகில் உள்ள அனைத்து மதங்களிலும் , மதத் தீவிரவாதம் இருக்கத்தான் செய்கிறது எனினும் அவற்றை எல்லாம் பின்னுக்குத் தள்ளிவிட்டு தீவிரவாத, வன்முறை நடவடிக்கைகளில் முன் நிற்கிறது இஸ்லாமிய தீவிரவாதம்.

உலகில் எங்கெல்லாம் முஸ்லிம்கள் இருக்கின்றார்களோ அங்கெல்லாம் முஸ்லிம் தீவிரவாதக் குழுக்களும் இருக்கின்றன. ஒரே இடத்தில் ஒரே இலட்சியத்திற்காக வெவ்வேறு குழுக்கள் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொள்வதிலும் வன்முறை நடவடிக்கைகள் ஏற்படு கின்றன.

அவர்கள் பிற சமூகத்தார் மீதும் வன்முறை நடவடிக்கைகளை மேற் கொள்கின்றனர். இவர்களுடைய வன்முறை நடவடிக்கைகளால் பொதுவாகப் பாதிக்கப்படுவது சம்பந்தமேயில்லாத அப்பாவிப் பொதுமக்களே.

தத்தம் பிண்ணணி சேர்ந்தவர்களின் ஆதரவில்லாமல் எந்த ஒரு தீவிரவாதக் குழுவும். தொடர்ந்து இயங்கவும் செயல்படவும் முடியாது. தம் பிண்ணணி சார்ந்தவர்களின் உதவியும், ஆதரவும் இல்லாமல் எத்தனையோ தீவிரவாதக் குழுக்கள் அழிந்து போய் இருக்கின்றன. எனில், முஸ்லீம் பொதுமக்களின் நேரடியான அல்லது மறைமுகமான ஆதரவே இத்தகைய தீவிரவாதக் குழுக்கள் அவர்கள் மத்தியில் பல்கிப் பெருகக் காரணமாக உள்ளது என்பது தெளிவு.

யாராலும் நியாயப்படுத்த முடியாத இந்த அடாச் செயல்களைச் செய்யும் முஸ்லிம் தீவிரவாதிகள் அவற்றை நியாயப்படுத்துவதற்காக அதற்கு இஸ்லாமியச் சாயம் பூசி 'ஜிஹாத்' என்று பெயர் கூறுகின்றனர்.

'இறைவனின் பாதையில் அறப்போர் புரிவது, பாடுபடுவது' என்ற விரிந்த அர்த்தம், தரும் சொல்லை அவர்கள் 'ஆயுதமேந்திய போர்' என்பதற்கு மட்டும் பயன்படுத்தி ஜிஹாத் என்ற வார்த்தையையே கெடுத்து வைத்திருக்கிறார்கள்.

சவூதியை எதிர்த்து ஈரானின் ஜிஹாத், ஈரானை எதிர்த்து ஈராக்கின் ஜிஹாத், என்று அவர்கள் தங்களுக்குள் போரிட்டுக் கொள்வதற்கும் இந்த ஜிஹாத் என்ற வார்த்தையைத் துஷ்பிரயோகம் செய்கிறார்கள். ஒரே கொள்கையைக் கொண்டவர்களுக்குள் ஜிஹாத் என்றால் அந்த ஜிஹாத் எதற்காக?

உலகில் இரண்டாவது பெரிய முஸ்லிம் ஜனத்தொகை இந்தியாவில் இருக்கும் போது, இந்தியாவுக்கெதிராக பாகிஸ்தான் செய்யும் 'ஜிஹாத்' யாருக்கு எதிராக? எந்த நோக்கத்திற்காக?

நிர்பந்தமில்லாத மார்க்கத்தில் நிர்பந்தத்தை உருவாக்க தாலிபான் செய்யும் 'ஜிஹாத்' எதனை நிலைநாட்ட?

முஸ்லிம் நாடுகளும், இயக்கங்களும் செய்யும் உலகை அச்சுறுத்தும் பயங்கர நடவடிக்கைகள் போதாது என்பது போல் ஒஸாமா பின் லாடன் போன்ற தனி மனிதத் தீவிரவாதிகளின் ‘ஜிஹாத்' வேறு!

தனி மனிதன் என்ற முறையில் ஒவ்வொருவரும் தன்னை இறைவனின் சட்டங்களுக்குக் கட்டுப்பட்டவனாக, அவருடைய திருப்திக்காகப் பாடுபடுபவனாக ஆக்கிக் கொள்ளும் முயற்சியே முதன்மையான ஜிஹாத். தனக்குள் இறைவனின் சட்டங்களை அமுல் படுத்திக் கொள்ளாதவன், ஆயுதமேந்தி பிறரை இறைவனின் சட்டங்களை அமுல் படுத்துமாறு வற்புறுத்துவது ஜிஹாத் ஆகாது.

தனக்குள் இறைச்சட்டங்களைச் செயல்படுத்தும் ஒருவன் இயல்பாக அக்கம் பக்கத்திலும், அருகாமையிலும், நடக்கும் தீமைகளைத் தடுக்கும் முயற்சியிலும், நன்மையை ஏவுவதிலும் முனைவதே அடுத்த கட்ட ஜிஹாத். ஜிஹாத் என்பது மனித சமூகத்தின் தரத்தை உயர்த்தப் பாடுபடுவதே அன்றி அதனை மிரட்டப் பயன் படுவதல்ல.

ஆயுதமேந்திய போர் தற்காப்புக்காக மட்டுமே. அதுவும் முதலில் நாம் தாக்கப்பட்ட பின்னரோ. வீடுகளை விட்டு வெளியேற்றப் பட்டாலோ மட்டுமே. இது ஜிஹாதின் இறுதிக் கட்டம் ஆகும். மேலும் (ஜிஹாத்) அறப்போர் என்பதன் ஒரு சிறுபகுதியே ஆயுதமேந்திய தற்காப்பு என்பது. மாறாக அதுவே முழுமையான அறப்போர் ஆகாது.

அன்றியும், பிறருக்கு நேரும் தீங்குகளைப்பற்றிக் கவலைப் படாமல் தான் சார்ந்த, மதம், சமூகம் ஆகியவற்றுக்காக மட்டும் போராடுவதும் ஜிஹாத் ஆகாது. முழுமையான மனித சமூகத்தின் மேம்பாட்டுக்காகப் பாடுபடுவதே உண்மையான அறப்போர் ஆகும். தர்மத்திற்கும், நீதிக்கும், நியாயத்திற்கும் பாடுபடுவதே உண்மையான அறப்போர் என்பது நாம் நன்கறிந்த ஒன்றே!

குர்ஆன் இத்தகைய தீவிரவாத்தை ஆதரிக்கிறதா? நிச்சயமாக இல்லை . சாந்தியையும், சமாதானத்தையும் போதிக்கும் (10:25) இஸ்லாம் தற்காத்துக் கொள்ளவே அன்றி போர் நடவடிக்கைகளைத் தடை செய்கிறது. (2:190) போரின் போது கூட வரம்பு மீறுதலை அனுமதிக்கவில்லை. சம்பந்தமில்லாத அப்பாவிப்

**சாந்தியையும், சமாதானத்தையும் போதிக்கும் (10:25) இஸ்லாம் தற்காத்துக் கொள்ளவே அன்றி போர் நடவடிக்கைகளைத் தடை செய்கிறது. (2:190) போரின் போது கூட வரம்பு மீறுதலை அனுமதிக்கவில்லை . சம்பந்தமில்லாத அப்பாவிப் பொதுமக்களின் உயிர்களைப் புனிதமானது என்று குர்ஆன் கூறுகிறது (6:151, 25:68) கொலை செய்வதை மிகப் பெரும் குற்றம் என்று அறிவிக்கின்றது.**

பொதுமக்களின் உயிர்களைப் புனிதமானது என்று குர்ஆன் கூறுகிறது (6:151, 25:68) கொலை செய்வதை மிகப் பெரும் குற்றம் என்று அறிவிக்கின்றது. 'மார்க்கத்தில் எவ்வித நிர்பந்தமுமில்லை' உங்கள் மார்க்கம் உங்களுக்கு, எங்கள் மார்க்கம் எங்களுக்கு என்று தெளிவான வார்த்தைகளில் மதசுதந்திரத்தை பிரகடனம் செய்கிறது. 'உங்கள் மார்க்கத்தில் நீங்கள் வரம்பு மீற வேண்டாம்' என்று நம்பிக்கையாளர்களை எச்சரிக் கின்றது.

மேலும் குர்ஆன் மனிதர்களனை வரும் ஒரு தாய் மற்றும் ஒரு தகப்பனிலிருந்து பிறந்து பல்கிப் பெருகியவர்களே என்றும் அவர்கள் வெவ்வேறு மக்களாகவும், குலங்களாகவும் பிரிந்திருப்பது அவர்கள் ஒருவரை ஒருவர் அடையாளம் கண்டு கொள்வதற்காகவே என்றும், இறைவனின் பார்வையில் மனிதர்களில் சிறந்தவர் அவர்களில் மிகவும் நல்லவரே என்றும் அழகான வார்த்தைகளில் மனிதர்களின் சகோதரத்துவத்தைக் கூறுகிறது (49:13)

மனிதர்கள் இறைவனுக்கு இணையாக்கி வழிபடுபவற்றை நீங்கள் திட்டவேண்டாம் என நம்பிக்கை யாளர்களுக்கு கட்டளையிடுவதன் மூலம் நம் உணர்வுகளும், பிறருடைய உணர்வுகளும் பாதிக்கப்படாமல், சுமூகமான வாழும் வழியைக் கூறுகிறது. (6:108).

நம்முடன் யார் போரிட வில்லையோ அவர்கள் மாற்று மதம் சார்ந்தவர்களானாலும் அவர்க ளுடன் நட்புறவுடன் வாழும்படிக் கட்டளையிடுகிறது (60:8) நடுநிலையுடன் வாழும்படி வலியுறுத்துகின்றது (2:143)

இவ்வாறு குர்ஆன் வன்முறை நடவடிக்கைகளுக்கு தெளிவாகத் தடைவிதித்து விட்ட பின்னரும் முஸ்லிம் பொது மக்களின் ஆதரவு எப்படி தவறான வழிமுறைகளில் செல்லும். இந்தத் தீவிரவாதக் குழுக்களுக்குத் தொடர்ந்து கிடைக்கின்றது?

இத்தனை அநியாயங்களையும், அக்கிரமங்களையும் செய்து விட்டுப் பின்னர் அவர்களுக்கு இறைவனின் ஆசியும் கிடைக்கும் என்று எப்படி இந்தத் தீவிரவாதக் குழுக்கள் எதிர்பார்க்கின்றன? குர்ஆன் ஒன்றை 'இல்லை' என்று கூறிய பின்னரும் ‘உண்டு' என்று இவர்களுக்குக் கூறியவர் யார் அல்லது எது?

மேற்கண்ட கேள்விகளுக்கு விடை, குர்ஆனுடன் மார்க்க ஆதாரமாக, இணைவைத்து முஸ்லிம்கள் கருதும் - 'நபியின் பெயரால் இட்டுக்கட்டப்பட்ட' - ஹதீஸ்கள் என்பதே ஆகும். ஹதீஸ்களில் எத்தனையோ நல்ல விஷயங்கள் இல்லையா என்று வாதிக்க வரும் சகோதரர்களுக்கு நாம் இங்கே ஒரு பழைய உதாரணத்தையே கூறுவோம். ஒரு குடம் பாலில் ஒரு துளி விஷம் கலந்திருந்தாலும் அந்த ஒரு குடம் பாலும் விஷமே.

அத்தகைய ஒரு துளி விஷமாகவே இட்டுக்கட்டப்பட்ட ஹதீஸ்கள் உள்ளன.
அவைதான் இஸ்லாமியர்களிடம் தீவிரவாதத்தை விதைக்கின்றன, வளர்க்கின்றன. ஹதீஸ்களின் மேல் நாம் கூறும் குற்றச்சாட்டிற்கான ஆதாரங்களையும் நாம் இங்கே தருவோம். அவை எப்படித் தீவிரவாதத்திற்குக் காரணமாகின்றன என்பதையும் காண்போம்.

உதாரணமாக, நீங்கள் தொழுது கொண்டிருக்கும் போது எவரேனும் குறுக்கே வந்தால், அவரைத் தடுத்து விடுங்கள். அவர் அதனை மீறிவர முற்பட்டால் அவனைக் கொன்று விடுங்கள். ஏனெனில் தொழுகையின் குறுக்கே வருபவன் சாத்தான். (அல்ஹதிஸ்)

இந்த ஹதீஸ் என்ன சொல்கிறது என்று கவனித்தீர்களா? ஓர் அற்ப விஷயத்திற்காகக் கொலை செய்யத் தூண்டுவது யார்? நம் அன்பிற்குரிய முஹம்மத் நபியா? ஒரு போதும் இருக்க முடியாது. தொழும்போது எவரேனும் குறுக்கே சென்று விட்டால் தொழுகை குறைவு பட்டு விடுமா என்ன? ஒரு வாதத்திற்காக அவ்வாறே வைத்துக் கொண்டாலும் அதற்காகக் கொலை செய்வதா?

மற்றொரு ஹதீஸ், தொழாதவர்களின் வீடுகளைத் தீ வைத்துக் கொளுத்தி விட நான் விரும்புகிறேன் என்று முஹம்மத் நபி கூறினார் என்கிறது. மார்க்கத்தில் நிர்பந்தமில்லை என்ற இறைச் சட்டத்தை முஹம்மத் நபி மதிக்க வில்லை என்பது போல் இந்த ஹதீஸ் சித்தரிப்பதைக் கூட நாம் பொருட்படுத்தாது விட்டுவிடலாம். ஆனால் மேற்கண்ட இரு ஹதீஸ்களும் தீவிரவாதத்தின் ஊற்றுக் கண்களாகத் திகழ்கின்றன என்பதைக் கூறாமல் விட்டு விட முடியுமா?

உங்களுக்கு ஏற்கனவே ஒரு தலைவர் இருக்கும்போது மற்றொருவர் தலைவராக உருவெடுத்தால் அவரைக் கொன்று விடுங்கள் என்று முஹம்மது நபி

கூறியதாக மற்றொரு ஹதீஸ். இந்த ஹதீஸ்தான் இன்று வரை ஷியாக்கள் சன்னிகளையும், சன்னிகள் ஷியாக்களையும் (இரு பெரும் இஸ்லாமிய பிரிவுகள்) மாறி மாறி சுட்டுக் கொல்லக் காரணமாக அமைந்திருக்கிறது. தன் தலைமைப் பதவியைத் தக்க வைத்துக் கொள்ள, எதிரிகளைச் சமாளிக்க ஒரு பலஹீனமான தலைவன் நபியின் பெயரால் இட்டுக்கட்டிய இந்த ஹதீஸ் ஒரு கொள்கையைக் கொண்ட பல பிரிவினரிடையே விரோதத்தையும் குரோதத்தையும் வளர்க்கவே உதவி செய்கிறது.

மேலும் தன் பணியாளைக் கொலை செய்ததற்காக உரைனா, உகைலா, ஆகிய இரு வம்சங்களையும் சேர்ந்த அனைவரையும் பிடித்துக் கண்களைக் தோண்டி எடுத்து மாறுகால் மாறுகை வாங்கி, பாலை வெயிலில் இட்டு தாகித்து மரணிக்கும்படி செய்தார் முஹம்மத் நபி என்று மற்றொரு ஹதீஸ்.

இறைவனின் சட்டங்களுக்குக் கட்டுப்பட்ட முஹம்மத் நபி கருணை உள்ளம் கொண்ட முஹம்மத் ஒரு போதும் அவ்வாறு செய்திருக்க மாட்டார்கள். ஏனெனில் அவர் குர்ஆனைப் பின்பற்றுபவராகவே வாழ்ந்தார் இந்த ஹதீஸ் இவர்களின் அநியாயங்களை - நியாயப்படுத்த நபியின் பெயரால் இட்டுக் கட்டப்பட்டதே.

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம், என்பதைப்போல் மேலே கூறப்பட்டவை ஹதீஸ்களின் தீவிரவாதத் தூண்டுதல்களுக்கு ஒரு சில உதாரணங்களே. ஹதீஸ்களை ஆய்வு செய்யச் செய்ய இவை போன்ற ஏராளமான ஹதீஸ்கள் நமக்குக் கிடைக்கும். குறைந்த பட்சச் சிந்தனை உள்ளவர்கள் கூட அத்தகைய ஹதீஸ்களில் எந்த நன்மையும். இல்லையென்றும், அவையே இஸ்லாமியத் தீவிரவாதத்திற்குக் காரணம் என்றும் உணர்ந்து கொள்ள முடியும்.

எனவே இறைவனின் திருப்தி கிடைக்கும் என்றெண்ணி இந்தத் தீவிரவாதக் குழுக்களின் நடவடிக்கைகளுக்குத் துணை போகாமல், ஆதரவளிக்காமல், நடுநிலையுள்ள முஸ்லிம்கள், மெய்யாகவே இறைவனின் திருப்தியை நாடும் முஸ்லிம்கள் தீவிரவாதக் குழுக்களை அவர்களுடைய நடவடிக்கைகளைக் கண்டிக்க வேண்டும். நேரடியாகவோ, மறைமுகமாகவோ இந்தத் தீவிரவாதிகளுக்கு ஆதரவளிப்பதில் இருந்து விலகிக் கொள்ள வேண்டும்.

குர்ஆனுக்கு முரணான ஒரு வழிமுறையைக் காட்டும் ஹதீஸ்களை நிராகரிக்க வேண்டும். அவற்றுக்கும் உண்மையான இஸ்லாத்திற்கும் எந்தச் சம்பந்தமுமில்லை என்பதை விளங்கிக் கொள்ளவும், பிரசாரம் செய்யவும் வேண்டும். இதன்மூலமே இஸ்லாமியத் தீவிரவாதத்தைக் கட்டுப்படுத்த முடியும்.

அவ்வாறு செய்யாமல் வெறும் வார்த்தைகளில் தீவிரவாதத்தைக் கண்டிப்பது எந்தப் பலனையும் அளிக்காது. மாறாக நாம் ஆதரிக்கும் தீவிரவாதம் நமக்கே விரோதமாக மாறி விடும் அபாயம் இருக்கிறது. ஏனெனில், தீமைக்குக் கூலி அதைப்போன்ற தீமையேயாகும் என்று இறைவன் குர்ஆனில் கூறுகிறார்.

முஸ்லிம்கள் உலகெங்கும் அடக்குமுறை செய்யப் படுகிறார்கள், அவர்களுடைய உரிமைகள் மறுக்கப்படுகின்றன என்பன போன்ற பல காரணங்களைக் கூறி, அவர்களுக்காகத்தானே இந்தத் தீவிரவாதக் குழுக்கள் போராடுகின்றன என்று தீவிரவாதிகளின் நடவடிக்கைகளை நியாயப்படுத்து வோர்க்கு இறைவனின் சட்டங்களை ஒரு தனிமனிதனோ அல்லது ஒரு சமூகமோ, சரியான முறையில் பின்பற்றினால் அவர்களுக்கு எந்தப்பாதிப்பும் நேராது என்ற இறைவனின் வாக்குறுதியை நாம் நினைவூட்ட விரும்புகிறோம்.

மேலும் சோதனைகள் ஏற்பட்டாலும் தொடர்ந்து இறைவனின் சட்டங்களுக்குட்பட்டு நடப்பதன் மூலமே அச்சோதனைகளில்இருந்துநாம்மீள முடியுமே அன்றி தவறான வழிமுறைகளில் செயல்படுவதன் மூலம் - நாம் மேன்மேலும் நஷ்டத்திற்குத்தான் உள்ளவோம்.

**'உங்களுக்கு நேரிடும் எந்தத் துன்பமும் உங்கள் கரங்களால் நீங்கள் தேடிக்கொண்டவையே'** என்ற இறைவனின் வாக்கை முஸ்லிம் சமூகம் எண்ணிப் பார்க்க வேண்டும். தங்கள் செயல்களைச் சீர்திருத்தி இறைவனின் சட்டங்களை மட்டுமே பின்பற்றுவதற்கு முன்வரவேண்டும். அதன் மூலம் மட்டுமே முஸ்லிம் சமூகத்தின் சீர்கேடுகள், துன்பங்கள் நீங்கும்.

சுய விமர்சனம் செய்து கொள்ளாத ஒரு தனிமனிதனோ, சமூகமோ முன்னேற முடியாது. முஸ்லிம் சமூகம் தன்னைத்தானே சுய விமர்சனம் செய்து தவறுகளைத் திருத்திக் கொள்ள வேண்டிய நேரம் வந்து விட்டது. தாங்கள் எதைப் பின்பற்றுகிறோம் என்பதை ஆராய வேண்டிய நேரம் வந்து விட்டது. இறைச் சட்டங்களை மட்டுமே பின்பற்ற வேண்டிய நேரமும் வந்து விட்டது. முஸ்லிம் சமூகம் அதைச் செய்யுமா?

# திருந்தி வாழ எண்ணுவோருக்கு

# இறைவனின் நற்ச்செய்திகள்

பாவிகளான மனிதர் களனைவரும் தங்கள் பாவங்களை உணர்ந்து, வருந்தி பாவங்களிலிருந்து மீண்டு கொண்டால் நம் பாவங்களை மன்னித்து விடுவதாக கடவுள் வாக்களிக்கிறார். நம் பாவங்களுக்காக அவர் நம்மைத் தண்டித்தால் சர்வ வல்லமை உடைய அவரை யாரால் என்ன செய்து விட முடியும்? இருப்பினும் நம் ரட்சகர் 'என் படைப்புக்களிடத்தில் நான் கருணையோடு இருப்பேன்' என்று தனக்குத் தானே விதித்துக் கொண்டார்.

கேளும் : வானங்கள், பூமியுலுள்ளவை அனைத்தும் யாருக்குச் சொந்தம்? கூறும் கடவுளுக்கே. அவர் கருணையுடன் இருப்பதைத் தன்னுடைய தன்மையாக விதித்துக் கொண்டார். தவிர்த்துவிட முடியாத அந்தத் தீர்ப்பு நாளின்போது உங்கள் அனைவரையும் அழைப்பார். யார் நம்ப மறுக்கிறாரோ அவர் தன் ஆத்மாவைத் தொலைத்து விட்டார் (6:12)

எவரேனும் பாவங்களைச் செய்தோ, அல்லது தன் ஆத்மாவுக்கு தீங்கிழைத்துக் கொண்டோ, பின்னர் இறைவனிடம் மன்னிப்புக் கேட்பாரானால், அவர் இறைவனை மன்னிப்பவராகவும், கருணை மிக்கவராகவும் காண்பார். (4:110)

பாவ மன்னிப்புக் கொருவது (இஸ்திஃபார்) என்பது தான் செய்த பாவங்களை நினைத்து அதற்காக வருந்துவது. அதிலிருந்து மீண்டுவிட எண்ணுவது. பாவ மீட்சி பெறுவது என்பது (தவ்பா) இனி அப்பாவத்தை ஒருபோதும் செய்ய மாட்டேன் என்று உறுதி பூண்டு அதனைச் சீர் செய்து கொள்வது.

பாவங்களைத் தொடர்ந்து செய்து கொண்டே இருந்து விட்டு அத்துடன் பாவங்களை மன்னித்து விடும்படி இறைவனிடம் ப்ரார்த்தித்து விட்டால் மட்டும் தப்பித்துக் கொள்ளலாம் என்று கருதுவது மதியீனம். ஏனெனில் பாவங்களில் இருந்து மீண்டு கொண்டால் மட்டுமே பாவமீட்சி கிடைக்கும். இதோ மற்றும் ஒரு நற்செய்தி!

கூறும்! வரம்புகளை மீறிவிட்ட என்

அடியார்களே, இறைவனின் அருளில் நீங்கள் நிராசையாகி விடவேண்டாம்.

நிச்சயமாக இறைவன் பாவங்கள் அனைத்தையும் மன்னித்து விடுவார். அவர் மன்னிப்பவராகவும் மிக்க கிருபையாளராகவும் இருக்கின்றார். (39:53)

குர்ஆனை நாம் முழுமையாக அணுக வேண்டும் என்பதற்கு இந்த வசனம் ஓர் எடுத்துக்காட்டாகும். இந்த வசனத்தை மட்டும் எடுத்துக் கொண்டு பாவங்கள் செய்வதற்குக் குர்ஆன் அனுமதி அளிக்கிறது என்று எண்ணக் கூடாது. இது வரம்புகளை மீறிவிட்ட தன் அடியார்களுக்குக் கடவுள் அளிக்கும் ஆறுதலே அன்றி பாவங்கள் செய்வதற்கான அனுமதி அல்ல. அவர்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை இறைவன் அடுத்த வசனத்திலேயே கூறுகிறார்.

தண்டனை உங்களை வந்தடைவதற்கு முன், உங்கள் இரட்சகருக்கு நீங்கள் கீழ்படிய வேண்டும், மேலும் நீங்கள் முழுமையாக அவரைச் சரணடைந்து விட வேண்டும். பின்னர் நீங்கள் உதவி செய்யப்பட மாட்டீர்கள்.

இங்கே நமக்களிக்கப் பட்டிருக்கும் அவகாசத்தை நினைவூட்டும் இறைவன் தண்டனைக்கு முன்னர் நம்மை எச்சரிக்கிறார். அவருக்குப் பணிந்து, கட்டுப்பட்ட நல்லோர்களில் ஆகி விட வேண்டுமென்று அறிவுறுத்துகிறார்.

காருண்யம் மிக்க கடவுள், நாம் திருந்திவிட்டால், அவர் பால் திரும்பி விட்டால் நம் பாவங்களை நம்மேல் இரக்கம் கொண்டு நம்மை மன்னித்து விடுவார். அது மட்டுமா? நம் இரட்சகரின் கருணையைப் பாருங்கள். குர்ஆ ன் வசனம் 25:70ல் கடவுள் அறிவிக்கும் தெளிவான நற்செய்தியைக் கேளுங்கள்.

எவர்கள் பாவங்களில் இருந்து மீண்டு, நம்பிக்கை கொண்டு நேரிய வாழ்வு நடத்துகிறார்களோ அவர்கள் (தண்டனையில் இருந்து) விதிவிலக்கு

அளிக்கப்படுகிறார்கள். இறைவன் அவர்களுடைய பாவங்களை நன்மைகளாக மாற்றி விடுவார். இறைவன் மன்னிப்பவராகவும், கிருபை மிக்கவராகவும் இருக்கிறார்.

ஆம்! இறைவன் மன்னிப்பவராக இருப்பதுடன் நம்முடைய பாவங்களைக் கூட நாம் அதிலிருந்து மீண்டு விட்டால், நன்மைகளாக மாற்றும் அளவுக்கு மிக்க கிருபையும், இரக்கமும் உடையவராக இருக்கின்றார்.

அது எப்படி பாவங்கள் நன்மைகளாக மாற்றப்படும்? இக்கேள்விக்கு விடை நீங்கள் திருந்தி பாவங்களில் இருந்து மீண்டு பாருங்கள். அது எப்படி மாறுகிறது என்பதை நீங்கள் அறிந்து கொள்வீர்கள். அல்லது நீங்கள் ஏற்கனவே ஏதேனும் பாவங்களில் இருந்து இறைவனுக்காக மீண்டு கொண்டிருந்தால் அவற்றைப் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள். இறைவன் நாடினால் உங்களுக்கு விடை கிடைக்கும்.

ஆனால், மனிதனோ பொறுமை இல்லாதவன், அவசரக்காரன், (21:37) (17:11) உறுதியில்லாதவன் பலஹீனமானவன் (4:28), பிறர் நலம் கருதாச் சுயநலவாதி (4:28), நன்றி கெட்டவன் (11:9) வரம்பு மீறுபவன் (14:34), விரக்தி அடைபவன் (17:83) கஞ்சத்தனம் மிகுந்தவன் (14:100) வீண்தர்க்கம் செய்பவன் (18:54) அறியாமை மிகுந்தவன், அக்கிரமக்காரன் (33:72) ஆர்வம் மிகுதியானவன் (70:19) கண்ணால் காண்பதை மட்டுமே நம்பக் கூடியவனாக (75:5). மற்ற அனைத்தும் பொய் என்று கருதுபவன், நிராகரிப்பவன், மறுப்பவன் (80:17) குற்றம்புரிபவன் (10:11,12).

நாம் அனைவரும் மனிதர்களே. எனவே, மனித இயல்புகளான இவற்றை நாம் எப்படி வெற்றி கொள்வது. இறைவன் நம்மேல் சுட்டிக்காட்டும் இக்குறைகளை எப்படிக் களைவது? கசடுகளை

எப்படி அகற்றுவது? அதற்கான செயல்முறையை இதோ இறைவன் கூறுகிறார்.

மானுடர்களே! உங்கள் இரட்சகரிடம் இருந்து உங்களுக்கு இங்கே இதோபதேசம் வந்திருக் கின்றது. மேலும் இது உங்கள் நெஞ்சங்களில் உள்ள நோய்களுக்கு அருமருந்தாகவும், வழி காட்டுதலாகவும் மேலும் நம்பிக்கை யாளர்க்கு அருளாகவும் இருக்கி ன்ற னது. (10:54)

மேலும் இறைவன் 47:2ல் உறுதி அளிக்கிறார்.

எவர்கள் நம்பிக்கை கொண்டு, நற்கருமங்களைச் முஹம்மதுக்கு இறக்கப்பட்டதன் மேல் நம்பிக்கை கொள்கிறார்களோ - அது அவர்கள் இரட்சகரிடமிருந்து வந்த சத்தியமாக இருக்கிறது - அவர்களுடைய தீமைகளை அவர்களை விட்டு நீக்கி, அவர்களுடைய காரியங்களைச் சீர் செய்து, திருப்தியை அருள்வார்.

இங்கே நாம் நம்முடைய தீமைகளைப் போக்கிக் கொள்ள ஒரு நிச்சயமான வழியைக் காட்டப்பெறுகிறோம்.
நிரூபிக்கப்பட்ட இறுதி வேதமான முஹம்மதுக்கு அருளப்பட்ட அரபி மொழியில் ஆன குர்ஆனை 114 அத்தியாயங்கள், 6346 வசனங்கள் கொண்ட கடவுளின் வார்த்தைகளான குர்ஆனை - அதைமட்டும் - பின்பற்றுவதை நம் தீமைகளைப் போக்கிக் கொள்ளும் வழியாக இறைவன் அறிவிக்கிறார்.

அவ்வாறு குர்ஆனை மட்டும் பின்பற்றுகிறவர்களுக்கு, அதன் வழிகாட்டல்களை மட்டும் நம்பிச் செயல்படுகின்ற நம்பிக்கையாளர்களுக்கு இவ்வுலகிலும் மறுமை வாழ்விலும் வெற்றியை வாக்களிக்கிறார். (10:62-64) அவர்களைப் பாதுகாத்துக் கொள்வதாகவும் உறுதி அளிக்கிறார். (22:38) நம்பிக்கையாளர்கள் நிச்சயம் வெற்றிபெறுவார்கள் என்றும் அவர் விதித்திருக்கின்றார். இதற்கெல்லாம் நாம் அவருக்கு நன்றி செலுத்த வேண்டும் அல்லவா? இறைவனின் அளவில்லாக் கருணையைப் பாருங்கள். நாம் நன்றி செலுத்தினால் நமக்கு மேலும்

அதிகப்படுத்துவதாகக் கூறுகின்றார் (14:7) அதிகப்படுத்தியதற்கு நாம் நன்றி கூறினால் அதற்கும் அதிகப்படுத்துவார். அதற்கும் நாம் நன்றி கூறினால்? நன்றி கூறிக்கொண்டே இருந்தால்....!

## மீட்சிக்கு குறைந்த பட்ச தகுதி

நம்பிக்கை கொண் டவர்களாயினும், யூதர்களாயினும், மாறியவர்களாயினும் மேலும் கிருஸ்தவர்களாயினும் எவர்கள் (ஒரே) கடவுள் மேல் நம்பிக்கை கொண்டு இன்னும் இறுதி நாளின் மீதும் நம்பிக்கை கொண்டு நற்செயல்கள் புரிகின்றார்களோ அவர்களுக்கு அச்சமில்லை துக்கமில்லை 5:69

## தூதர்களுக்கு ஆதாரம்தூதுச் செய்தியே!

பெருமையடித்துக் கொண்டிருந்த தலைவர்கள் பலஹீனர்களாக கருதப்பட்ட நம்பிக்கை கொண்டவர்களை நோக்கி: 'நிச்சயமாக ஸாலிஹ் அவருடைய இறைவனிடமிருந்து அனுப்பப்பட்ட தூதரென நீங்கள் எவ்வாறு அறிந்து கொண்டீர்கள்?" எனக்கேட்டார்கள் - அதற்கு அவர்கள் கூறினார்கள் "நிச்சயமாக நாங்கள் அவர் மூலம் அனுப்பப்பட்ட தூது செய்தியை கொண்டே " அவரை நம்பினோம் என்றார்கள். 7:75

குர்ஆன் ஆய்வு மைய வெளியீடுகள்

முஸ்லிம்களுக்கு

# 19

# கேள்விகள்

இன்றைய முஸ்லிம்களின் தவறான பாரம்பரிய நடைமுறைகளை சுட்டிக்காட்டி சரியான இஸ்லாத்தின் (அடிபணிதல்) பக்கம் அனைத்து மக்களையும் புதிய சகாப்தத்தை நோக்கி அழைக்கிறது

## அறிவிப்பு

ரஷாத் கலிபாவின் ஜும்மா பயான்கள் ஆங்கிலத்திலும் தமிழிலும். ரஷாத் கலீபாவின் குர்ஆன் வகுப்பு ஆடியோ தமிழ், ஆங்கிலம், உருது, குர்ஆன் ஆடியோ. குர்ஆன் மட்டுமே மார்க்கம் ஹதீஸ்கள் மார்க்கம் அல்ல என்பது பற்றி தெளிவான குர்ஆன் வசனங்கள் கூடிய ஜும்மா பயான்கள், குர்ஆன் ஹதீஸ் இஸ்லாம் புத்தகம், முஸ்லிம்களுக்கு 19 கேள்விகள் புத்தகம், புதிய நினைவூட்டல் புத்தகங்கள் கிடைக்கும். மிகக் குறைந்த விலையில் ஆங்கிலம், தமிழ், குர்ஆன் Amazon, Flipkart மூலியமாக கிடைக்கும்.
www.kadavulmattum.org

அளவற்ற அருளும் நிகரற்ற அன்பும் உடைய
இறைவனின் திருப்பெயரால்

# பிரகடனம்

- அனைத்து மக்களுக்கும் ஒருங்கிணைந்த மார்க்கம்.
- அல்குர் ஆன் சந்தேகமின்றி அகிலங்களின் அதிபதியிடம் இருந்து வந்ததே.
- இறுதி வேதம், அது இறைவனிடம் இருந்து வந்ததுதான் என்பதற்கான தெளிவான அத்தாட்சிகளை தனக்குள்ளேயே கொண்டதாக இருக்கிறது. அது மனித சக்திக்கு அப்பாற்பட்ட முறையில் கணித அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளது.
- இது, இறைவன் தான் சத்தியம் என்பதையும், அவர் மரணித்தவரை உயிர்ப்பிப்பார் என்பதையும் அவர் அனைத்திற்கும் ஆற்றல் உடையவர் என்பதையும் நிரூபிக்கிறது.
- எல்லா இறைதூதர்களும் தந்த செய்திகளை ஒருங் கிணைத்து ஒரே செய்தியாக உலகிற்கு தருகிறது.
- முற்றிலும் இறைவனுக்கே அடிபணிதல் இறைவனை மட்டுமே வணங்கி, வணக்கத்தை கலப்பின்றி அவருக்கு மட்டுமே செய்தல்

ஓர் உலகம்
ஓர்-இறை
ஒரே செய்தி

Book - Post

To

*If undelivered Please return to*

SB Graphic Design And Printers
+91 824 854 1120,+91 877 825 7662